பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 252

புதன்கிழமை
05 ஓகஸ்ட் 2026

புதன்பொய்கை

ஆடி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057



விமான நிலையத்துக்கான காணி சுவீகரிப்பில்

# மதிப்பீட்டு விவரம் இன்றி கையொப்பம் பெறச் சதி!

## காணி உரிமையாளர்கள் பெருங்குழப்பம் பொலிஸார் அழைக்கப்பட்டதால் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5

பலாலி விமான நிலையத்துக்காக சுவீகரிக்கப்படவுள்ள காணிகளின் அமைவிடத்தைக் கருத்திற்கொள்ளாமல் இழப்பீடு வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையால் காணிகளின் உரிமையாளர்கள் குழப்பமடைந்தனர். இதனால் பணிகள் அனைத்தும் கைவிடப்பட்டன.

»15

## மின் கட்டணத்தில் மாற்றம் இல்லை!

கொழும்பு, ஓக. 5

இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டுக்கான மின் கட்டணத்தில் எவ்விதத் திருத்தமும் செய்யத் தேவையில்லை என்று பொதுப் பயன்பாடுகள்

»15

## இந்தியத் தூதுவருடன் தமிழ்க் கட்சிகள் சந்திப்பு

கொழும்பு, ஓக. 5

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுடன் ஆறு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். தமிழர்களின்

»15

ரணில் - மைத்திரி ஆட்சிக்கால

## வீடமைப்புத் திட்டத்தை முழுமையாக்க உதவுக

கண்டாவளையில் மக்கள் போராட்டம்

கிளிநொச்சி, ஓக. 5

2018ஆம் ஆண்டு நடைமுறைக்குவந்த வீட்டுத்திட்டதுக்கான நிதியை முற்றாக விடுவிக்குமாறு வலியுறுத்தி கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயல

»15

சிறைநெருக்கடிக்குத் தீர்வாக

## வீட்டுக்காவல் முறைக்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஓக. 5

சிறைச்சாலை நெருக்கடித் தீர்வாக வீட்டுக்காவலில் தடுத்து வைக்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

»15

குட்டிமணி, தங்கத்துரைக்கு

## சிலைகள் அமைக்க தொடர்கிறது தடை!

யாழ்ப்பாணம், ஓக. 5

வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட அரசியற் கைதிகளான குட்டிமணி மற்றும் தங்கத்துரை ஆகியோருக்கு சிலை நிறுவுவதற்கு விதிக்கப்

»15

அரசுக்கு எதிர்ப்பைத் திரட்ட

## மகாநாயக்க தேரர்களிடம் விரைகின்றது எதிர்க்கட்சி

விரிவு பக்கம்:-15

மத்திய மலைநாட்டில்

## சீரற்ற காலநிலை; 11,832 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 5

மத்திய மலைநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 3 ஆயிரத்து 14 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 832 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

»15

## மோ.சைக்கிள் மோதி முதியவர் துயரச்சாவு

காரைநகரில் சோகம்

யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ்ப்பாணம் காரைநகர்ப் பகுதியில் மோட்டார்சைக்கிளும், சைக்கிளும் மோதி இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் பயணித்த முதியவர்

»15

மன்னாரில்

## பெருமளவு கஞ்சாவுடன் 2 சந்தேகநபர்கள் கைது

மன்னார், ஓக. 5

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுப்பாடு கிராமத்தில் பெருமளவு கேரளக் கஞ்சாவுடன்

»14



செம்மணிப் புதைகுழியில்

## 4 என்புத்தொகுதிகள் நேற்றும் அடையாளம்



யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் மேலும் நான்கு என்புத் தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணிப் புதைகுழி தொடர்

»15

தொண்டைமானாறு பகுதியில்

## இறந்த நிலையில் ஒதுங்கும் நூற்றுக்கணக்கான மீன்கள்!



யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு பாலத்துக்கு அண்மித்த பகுதிகளில்

»15

முச்சந்தி முனி

"இஞ்ச வெக்கையால மீனெல்லாம் அழியுது. அங்கால கடும் மழையால இடமெல்லாம் அழியுது"

மக்கள் ம[illegible] நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4511 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 23 30 50 64 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1578 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 09 18 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0537 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 5 2 8 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2617 |
| ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 23 |
| வெற்றி இலக்கங்கள் | 13 26 36 57 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6269 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 0 8 9 1 3 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2299 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 25 66 73 80 |
| விசேட எழுத்து | P |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0385 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 24 54 |

## 'டைபூன்' சூறாவளியால்

# ஓகஸ்ட் 6க்குப் பின் மீண்டும் மழை!

**கொழும்பு, ஓக.5**
**ஜப்பானுக்குத் தெற்கே பசிபிக் பெருங்கடலில் உருவாகியுள்ள 'டைபூன்' சூறாவளி மேலும் தீவிரமடைந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இந்தச் சூறாவளி தீவிரமடைவதன் தாக்கத்தால், எதிர்வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதிக்குப் பின்னர் மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுப் பகுதிகளில் மீண்டும் மழை பெய்யக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சப்ரகமுவ மாகாணம் மற்றும் கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் பலத்த அடைமழை பெய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலைநாட்டுப் பகுதிகள் மற்றும் மண்சரிவு அபாயம் உள்ள இடங்களில் வாழும் பொதுமக்கள் குறித்த காலப்பகுதியில் அவதானத்துடன் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0977 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 9 2 5 4 4 8 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3243 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 08 47 50 65 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 01 05 15 80 |
| வெற்றி வாரம் | 5404 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 1073 |
| வெற்றி இலக்கம் | 19 44 45 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| மிதுனம் | |
| வெற்றி இலக்கம் | 01 12 22 55 |
| சீட்டிழுப்பு வாரம் | 4955 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 38 |
| வெற்றி இலக்கம் | 15 16 40 45 |
| வெற்றி வாரம் | 2419 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 04.08.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 38 40 51 53 |
| வெற்றி வாரம் | 3069 |



## வெள்ளத்தில் சிக்கிய பேருந்து; ஜன்னலால் பயணிகள் மீட்பு!

கொழும்பு, ஓக.5
நாவலப்பிட்டி பாலந்தொட்ட பகுதியில் நிலவிவரும் சீரற்ற காலநிலை மற்றும் கனமழை காரணமாக, வெள்ளநீரில் சிக்கித்தவித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்திலிருந்த பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.
அந்தப் பகுதியில் சேற்றுடன் கூடிய வெள்ளநீர் திடீரென உயர்ந்து பேருந்தை முழுமையாகச் சூழ்ந்துகொண்ட நிலையில், பயணிகள் வெளியேற முடியாமல் உள்ளேயே தவிக்கும் நிலை ஏற்பட்டது.
அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவினர் உடனடியாகச் செயற்பட்டு லொறி ஒன்றின் உதவியுடன் துரித மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.
பேருந்தின் கதவுகளைத் திறக்கமுடியாத அளவுக்கு வெள்ள நீர் சூழ்ந்திருந்ததால், பயணிகள் அனைவரும் பேருந்தின் ஜன்னல்கள் வழியாக லொறிக்கு மாற்றப்பட்டுப் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். நாவலப்பிட்டி இளைஞர்களின் இந்தத் துணிகரச் செயலுக்கு பொதுமக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்., (ச-இ)

## திடீர் மின்தடை

கொழும்பு, ஓக.5
நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பல மாவட்டங்களில் மின்தடை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மத்திய மாகாணத்தின் பல பகுதிகள், கொழும்பின் சில பிரதேசங்கள் உட்பட ஏராளமான பிரதேசங்களில் இந்த மின்தடை ஏற்பட்டுள்ளது.
அதிக மழை மற்றும் கடும் காற்று காரணமாக மின்கம்பிகள்மீது மரங்கள் முறிந்து விழுந்த காரணத்தினால் பல பிரதேசங்களில் மின்சாரத்தடை ஏற்பட்டுள்ளது. (ச-இ)

## மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை!



கொழும்பு, ஓக.5
நாட்டின் பல பகுதிகளில் சீரற்ற காலநிலை தொடர்ந்துவரும் நிலையில் சில மாவட்டங்களுக்கான மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கண்டி மாவட்டத்தின் கங்கா இஹல கோரல, உடு தும்பரா மற்றும் பஸ்பாகே கோரல பிரிவுகளுக்கு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.
குறித்த பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தமது பாதுகாப்புத் தொடர்பில் அவதானத்துடன் இருக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சீரற்ற காலநிலையால் வழக்குகள் ஒத்திவைப்பு!

நுவரெலியா, ஓக.5
நுவரெலியா மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக ஹற்றன் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த அனைத்து வழக்குகளையும் எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மோசமான வானிலை காரணமாக நீதிமன்ற ஊழியர்கள், வழக்கு விசாரணைகளில் பங்கேற்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நீதிமன்றத்துக்கு வருவதற்கு போதிய போக்குவரத்து வசதிகள் இன்மையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அதிகூடிய மழைவீழ்ச்சி நுவரெலியாவில் பதிவு

நுவரெலியா, ஓக.5
கடந்த 24 மணிநேரத்தில் நாட்டின் மிக அதிகளவான மழைவீழ்ச்சி நுவரெலியா மாவட்டத்தின் நோர்ட்டன் பகுதியில் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 8:30 மணி முதல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8:30 மணி வரையிலான 24 மணிநேர காலப்பகுதியில், நோர்ட்டன் பகுதியில் 258.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.
இதே காலப்பகுதியில் மலையகத்தின் ஏனைய முக்கியமான நீர்ப் பிடிப்புப் பகுதிகளிலும் பலத்த மழை பதிவாகியுள்ளது.
தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழை காரணமாக மலையகப் பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்துவருவதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# மஹர சிறைச்சாலை வன்முறை காரணம் கண்டறியவில்லை



## நீதியமைச்சர் தெரிவிப்பு!

**கொழும்பு, ஓக.5**

**மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலுக்கான துல்லியமான காரணம் இதுவரையில் கண்டுபிடிக்கப் படவில்லை. எனினும் நாட்டின் சிறைச்சாலை அமைப்பைப் பலவீனப்படுத்தும் நோக்கில் திட்டமிடப்பட்ட வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அறிய முடிகிறது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலை மோதல்கள் தொடர்பாக அரசாங்கத்துக்குச் சில விசேட மற்றும் முக்கியமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனடிப்படையில் குறிப்பிட்ட சில சிறைச்சாலைகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு அவதானிக்கப்பட்டு வருகின்றது. மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்குச் சிறைச்சாலைக்கு வெளியேயுள்ள நபர்களின் ஒத்துழைப்போ அல்லது பின்னணியோ கிடைக்கப்பெற்றுள்ளதா என்ற பலத்த சந்தேகம் நிலவுகிறது. சிறைச்சாலைக் கட்டமைப்பைச் சீர்குலைக்கவும் பலவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்ட வகையில் சிலர் செயற்படுகின்றனர். இதுதொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ச-இ)

## சாகர வெளியிட்ட கருத்து விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஓக.5

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொலிஸ்மா அதிபர் அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதை விடுத்து, அரசுக்கும் மக்களுக்குமே சேவையாற்ற வேண்டும் என்றும், 37ஆவது பொலிஸ்மா அதிபர் தெருவில் மக்களின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த பொலிஸ்மா அதிபர் என்ற பெயரில் வரலாற்றில் இடம்பிடிப்பதை தாம் விரும்பவில்லை என்றும் ஊடக சந்திப்பொன்றில் சாகர காரியவசம் தெரிவித்திருந்தார். (எ-44)

## சட்டவிரோத மீன்பிடி: 36 பேர் கைது!

கொழும்பு, ஓக.5

நாடளாவிய ரீதியில் இலங்கைக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 36 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை 16ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் வடமேற்குக் கடற்படைக் கட்டளைகளுக்குட்பட்ட கடற்பரப்பு மற்றும் கடலோரப் பகுதிகளில் இந்தக் கூட்டுநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது சட்டவிரோத நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்ட 17 டிங்கிப் படகுகள், ஒரு கப் ரக வாகனம், சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள், சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட கடல் அட்டைகள் ஆகியவற்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். (ச-இ)




## 500 போதைமாத்திரைகளுடன் சாய்ந்தமருதில் சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஓக.5

சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் விற்பனைக்காகவும் பயன்பாட்டுக்காகவும் மறைத்துவைக்கப்பட்டிருந்த 500 போதைமாத்திரைகளுடன் 32 வயதுடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மூவர் அடங்கிய பொலிஸ் குழுவினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மேற்கொண்ட சோதனையில் இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரிடம் சாய்ந்தமருது பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ச-இ)



## குப்பைத் தொட்டியிலிருந்து 'ஹஷீஷ்' போதைப்பொருள்

கொழும்பு, ஓக.5

ஒரு கோடியே 18 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான 'ஹஷீஷ்' போதைப்பொருள் தொகுதியொன்று கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வருகை முனையத்தில் கைவிடப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

பெண்கள் கழிப்பறையின் 2 குப்பைத் தொட்டிகளுக்குள் இருந்தே இந்தப் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

அச்சம் காரணமாக, கடத்தல்காரர்கள் போதைப்பொருளைக் கழிவறையின் குப்பைத் தொட்டிக்குள் வீசிவிட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் எனச் சுங்கஅதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். (ச-இ)




## பலிக்காத கனவுகள்

எபோலாவை விடவும் பொல்லாதது உந்த முதலமைச்சர் கனவு வாற வருத்தம் தான். நாலு பேருக்கு எங்களைத் தெரியுமெண்டால் எங்களுக்கு முதலமைச்சரா வாரத் தகுதி இருக்கு எண்டு எல்லாரும் நினைக்கிற அளவுக்குத்தான் இப்பத்தை நிலைமை இருக்கு. அந்த நினைப்பு வாறதுக்கு ரண்டே ரண்டு காரணம் தான் சொல்லேலும். எங்கையோ கொழும்பில இருந்து பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்த முன்னாள் நீதிபதியாரை இஞ்ச பல்லக்கில தூக்கியந்து, அப்பிடியே தங்கத் தட்டில முதலமைச்சர் பதவியைக் குடுத்தமெல்லோ, அது முதலாவது காரணம். இல்லாத பிரச்சினை இருக்கெண்டு சொல்லி, ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி தன்ர பேஸ்புக், யூரியூப் வருமானத்துக்கும், வெளிநாட்டு அன்ரிமாரிட்ட காசு வறுகிற துக்கும் சமூகப் போராளி மாதிரி நாடகமாடின ஊசிக் காரரை எம்.பியாக்கினது தான் அடுத்த காரணம். இது ரண்டையும் ஒரு ரோல்மொடலா வைச்சுத்தான் மற்ற வைக்கும் 'முதலமைச்சரா வாறதொண்டும் பெரிய கஷ்ட மான வேலை இல்லை' எண்ட நினைப்பும், கனவும் வாறதுக்கு முக்கியமான காரணம்.

அப்பிடி முதலமைச்சர் கனவு வந்திருக்கிற இன்னொருத்தர் வெளிநாட்டில சிம் காட் வித்து, பிறகு மீடியாவுக்குள்ள புகுந்து, அதுக்குப் பிறகு இஞ்ச வந்து பண்ணை, பொழுது போக்கு இடம் எண்டு கட்டி, நாளும் பொழுதும் ஆடல் போடல் எண்டு வீடியோக்கள் போட்டு அமர்க்களப்படுத்திறவர். அவருக்கு முந்தித் தொடக்கமே முதலமைச்சரா வாறதுக்கு ஆசை இருக்குது. அதாலதான் வீட்டுக்கட்சிக்குள்ள பின்பக்கமா புகுந்து, மாகாண சபைக்குள்ள வாறதுக்கு பிளான் பண்ணினவர். வீட்டுக்கட்சியின்ர கூட்டங்களுக்கு காசையும் அள்ளி இறைச்சவர். ஆனால் அவர் நினைச்சதுக்கு மாறா வீட்டுக்கட்சி ஆளை உள்ளுக்க எடுக்காமல் விட்டிட்டுது. இந்தமுறைக்கு முதல் நடந்த பார்லிமெண்ட் எலக்சனில வீட்டுக்கட்சியில இப்ப எதிரும் புதிருமா நிக்கிற வாத்தியாரும், அப்புக்காத்தரும் பாலும் தேனுமா நிண்டவை. அந்த நேரத்தில 'என்னை கட்சிக்குள்ள எடுக்காத உங்களைத் தோக்கடிக்காமல் விடமாட்டன்' எண்டு சலஞ்ச் போட்டுக்கொண்டு, அவர் கனவேலையள் செய்தவர். ஆனால் அதையும் மீறி ரண்டு பேரும் வெண்டதால, பிறகு மெல்ல மெல்ல வாத்தியாரை மட்டும் சப்போர்ட் பண்ணுற மாதிரி மாறினார். அதுவும் வேலைக்கு ஆகேலை. அதால ஊரில உள்ள புத்திஜீவிகள் எண்டு சொல்லுற ஆக்களையெல்லாம் கூப்பிட்டு மீட்டிங்கெல்லாம் வைச்சு தனிக்கட்சி தொடங்கிற மாதிரி வெருட்டியும் பார்த்தார். அப்பவும் வீட்டின்ர கதவு திறபடேலை. ஆனாலும் அவருக்கு தொடர்ந்தும் அந்தக் கனவு வந்து கொண்டே இருக்காம். கைநிறையக் காசிருந்தால் நினைச்சதெல்லாம் நடக்குமெண்டு நம்புறார் போல.

அதைமாதிரி ரிக்ரொக்கில உதவி செய்யிற வீடியோ போட்டு, நல்லாக் காசு பார்த்த ஒருத்தருக்கும் இந்தக் கனவு முத்திப்போட்டுது. எப்பிடியும் அடுத்த முதலமைச்சராகிறது உறுதி எண்டு எல்லாரிட்டையும் சொல்லுறாராம்., அவருக்குத் தெரிஞ்சதெல்லாம் ரிக்ரொக் உலகம் மட்டும் தான். ஆனால் உண்மையான உலகம் அதுக்கு மாறானது எண்டு அவருக்குத் தெரியேலை. இவையளை விட எல்லா ஆசையும் துறந்திட்டம் எண்டு சொல்லுற சில ஆன்மீகக்காரருக்கும் முதலமைச்சர் கனவு வரத் தொடங்கியிருக்காம். இப்பிடியே போனால் வடக்கில இருக்கிற எல்லாருக்கும் இந்தக் கனவு வந்து, எல்லாரும் அவைய வைக்குத்தான் வோட் பண்ணிற நிலைமை வருகுதோ தெரியேலை.

padsi@uthayan.com
- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.5

மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் டிஜிற்றல் கல்வி மையத் திறப்புவிழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும்.

அதிபர் பாலசுப்பிரமணியம் பார்த்தீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆனந்த ஜெயேந்திரன் சஞ்சீவன், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சோமசுந்தரம் இராமநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (க)



# தூய ஒளிக்கிண்ணம் றேஞ்சஸ் அணி வசம்

யாழ்ப்பாணம், ஓக.5

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 11 நபர் கொண்ட வடமாகாண ரீதியிலான தூய ஒளிக்கிண்ணம் உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில் சம்பியனானது கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி. கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில், கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி எதிர் ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது. ஆரம்பம் முதல் இரு அணிகளும் மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. முதல் பாதியாட்டம் 2:1 என்ற கோல் கணக்கில் முடிவடைந்தது. இரண்டாம் பாதியாட்ட ஆரம்பத்தில் இரு அணிகளும் தமது கள வியூகங்களை மாற்றியமைத்து களமிறங்கினர். மேலதிக கோல்களின்றி ஆட்டமானது 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் சமநிலைத் தவிர்ப்பு உதையில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தூய ஒளிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது கொற்றாவத்தை அணி. இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக முன்கள வீரன் அபியும், சிறந்த கோல்காப்பாளராக ஆர்நிகனும் தெரிவுசெய்யப்பட்டனர். இறுதிவரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது ஆனைக்கோட்டை யூனியன் அணி. (க)

# கலாசாரப் போட்டிக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், ஓக.5

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், பிரதேசமட்டத்திலான கலாசாரப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நடனம், இசை, அறிவிப்பாளர், இலக்கியம், புகைப்படம், வாத்திய இசைக் கருவிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிகள் இடம்பெறும்.

பிரதேசமட்டத்திலான முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், தேசியமட்டத்தில் முதல் இடம் பெறுவர்களுக்கு தேசிய விருது , சான்றிதழ், பணப்பரிசுகளும் வழங்கப்படும். இதற்கு 15 வயது தொடக்கம் 29 வயதுக் குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். தகுதியுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் ஆகிய வற்றைக் குறிப்பிட்டு, எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் கேட்டுள்ளது. (க)

# பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக.5

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரனையுடன், யாழ்.பண்பாட்டுப் பேரவை மற்றும் பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் திருமதி சிவகாமி உமாகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் கலந்துகொள்வார். நிகழ்வில் பண்பாட்டு ஊர்வலம், மற்றும் கலைநிகழ்வுகள் இடம்பெறும். தொடர்ந்து யாழ்.ரத்னா, இளங்கலைஞர் விருது வழங்கல், பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெறும். (க)

## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.5

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தின், நூற்றாண்டுவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (க)

## ஆடிப்பூரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.5

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரத் திருவிழா இன்று புதன்கிழமை ஆம்பமாகும். தொடர்ந்து 10 நாள்கள் விசேட பூசைகள் இடம்பெற்று, எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூரத்தன்று விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து அம்பாள் அழகிய தாமரைப்பூ பீடத்தில் எழுந்தருளி உள் வீதி, வெளி வீதி வரும் அலங்கார அருட்காட்சி நடைபெறும். (க)

# செல்லப்பா சுவாமிகள் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.5

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அபிஷேகம், திருமுறை நற்சிந்தனை ஓதல் என்பவற்றைத் தொடர்ந்து, காலை 10.30 மணிக்கு 'எண்ணில் தவம்' எனும் தலைப்பில், ஓய்வுநிலை ஆசிரியை சிவசக்தி உரையாற்றவுள்ளார். (ச)

# வருடாந்தத் திருவிழா

வவுனியா, ஓக.5

கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து இடம்பெறும் திருவிழாக்காலத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை சப்பறத்திருவிழாவும், எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (க)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதியமுயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக் கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும்.

**கன்னி:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தொடர்பு கொண்டு பேசுவது மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும்.

**கும்பம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணசபைகளின் அதிகார வரம்புக்குள் பாடசாலைகளைச் சுவீகரிக்க சட்டமில்லை!

## சர்வேஸ்வரன் தாக்கல் செய்த வழக்கு வெற்றி

மாகாணசபைகளின் அதிகார வரம்புக்குட்பட்ட பாடசாலைகளைத் 'தேசிய பாடசாலைகள்' என்ற பெயரில் மத்திய கல்வி அமைச்சு சுவீகரிப்பதற்குச் சட்ட ரீதியான ஏற்பாடுகள் எதுவும் இல்லை எனச் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் கல்வி என்பது மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடயமாகும். எனினும், யுத்தகாலத்தில் மத்திய கல்வி அமைச்சு அரசியல் யாப்புக்கு முரணாக நாடு முழுவதிலும் ஏறத்தாழ 350 பாடசாலைகளையும் (வடக்கில் 20 பாடசாலைகள்) நிர்வாக வழிகளினூடாகத் தேசிய பாடசாலைகளாகத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தது. அன்றைய கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெருமா மேலும் 650 பாடசாலைகளைச் சேர்த்து 'ஆயிரம் தேசிய பாடசாலைகள்' திட்டத்தை அறிவித்தார். ஜி.எல்.பீரிஸ், தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் இதனைத் தீவிரமாக முன்னெடுத்தனர். மாகாண அதிகாரங்களைப் பறிக்கும் இந்தச் சட்டவிரோத நடவடிக் கைக்கு எதிராகக் கலாநிதி க. சர்வேஸ்வரன் 2022 மேமாதத்தில்மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். வழக்கின் தொடர்ச்சியாக, 18.08.2023 மற்றும் 20.02.2024 திகதியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம், புதிதாகத் தேசிய பாடசாலைகளாக அறிவிக்கப்பட்ட பாடசாலைகளின் பெயர்ப்பலகைகளை அகற்றுமாறும், அதிபர்கள் தேசிய பாடசாலை முத்திரையைப் பயன்படுத்தக்கூடாது என்றும் மத்திய கல்வி அமைச்சு உத்தரவிட்டது. 2025 மே 23 அன்று மன்றில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், "குறிப்பிட்ட அமைச்சரவைத் தீர் மானத்தை நடைமுறைப்படுத்தத் தற்போது சட்டம் இல்லை" எனச் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளதாக ஒப்புக்கொண்டார். ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகள் தவிர வேறு எதனையும் சுவீகரிக்கும் உத்தேசம் மத்திய அரசுக்கு இல்லை என்ற எழுத்துமூல உறுதிப்பாட்டையும் சட்டமா அதிபர் நீதி மன்றத்துக்குச் சமர்ப்பித்தார். அதற்கமைய வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனால் தாக்கல் செய்யப்பட்ட சட்டப் போராட்டம் வெற்றி பெற்று முடிவுக்கு வந்துடன் நாடு தழுவிய ரீதியில் கையகப்படுத்தப்படவிருந்த 650 பாடசாலைகளும் (வடக்கில் 48 பாடசாலைகள்) மத்திய அரசால் பறிக்கப்படாமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. (ச-26)

# தனிநாயகம் நினைவரங்கம்

யாழ். பல்கலைக்கழத் தமிழ்த்துறை, தமிழ்ச் சங்கமும் மற்றும் தமிழி அமைப்பும் இணைந்து நடத்தும் வண். பேராசிரியர் எஸ்.தனிநாயகம் அடிகளார் நினைவரங்கம், எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் செ. சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம் பெறும் நிகழ்வில், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவர் அரசர் அருளாளர் தொடக்கவுரையும், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றச் செயலாளர் டி. ஞானசேகரன் சிறப்புரையும் ஆற்றுவர். தொடர்ந்து திருமறைக் கலா மன்ற நிர்வாக இயக்குநர் அருட்பணி ஜெரோ செல்வநாயகம் நினைவறிமுகவுரை யையும், கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலை முதுநிலை விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் நினைவுரையையும் ஆற்றுவர். இந்த அரங்கில் கைஅகர முதலியும் வெளியிடப்படும். (க)

# ஆடிப்பூரம் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.5

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச்சிவன் சுவர்ணாம்பிகை அம்பாள் ஆலயப் பராபவ வருட ஆடிப்பூர மஹோற்சவம் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் தேர்த்திருவிழாவும், 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ச-66)

# கொத்மலை நீர்த்தேக்கத்தின் மேலுமொரு வான்கதவு திறப்பு

கொழும்பு, ஓக.5

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவு நேற்றுச் செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக நீர்த்தேக்கப் பொறுப்பதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நீர்மட்டம் அதிகரித்துவருவதால் வான் கதவு திறந்து நீரை வெளியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கொத்மலை ஆற்றின் இரு கரைகளிலும் வாழும் மக்கள் தொடர்ந்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதிகள் ஓய்வு வயது உயர்வை மறுபரிசீலனை செய்யவேண்டும்!

## சர்வதேச நீதிபதிகள் சங்கம் இலங்கை அரசுக்கு வலியுறுத்து

**கொழும்பு, ஓக.5**

**உயர்நீதிமன்ற மற்றும் மேல்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்புத் திருத்தம் குறித்து உடனடியாக மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று சர்வதேச நீதிபதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இத்தாலியின் ரோமைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்த சர்வதேச அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்தும் இத்தகைய முக்கிய முன்மொழிவுகள் தன்னிச்சையான, தற்காலிக மற்றும் அவசரமான தீர்மானங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படக் கூடாது.

இத்தகைய அரசியலமைப்புத் திருத்தங்களைத் தர்க்கரீதியான, கொள்கைசார்ந்த மற்றும் வலுவான அரசியலமைப்புச் சட்டத் திருத்த நடைமுறையின் மூலமே கொண்டுவர வேண்டும்.

இலங்கை அரசாங்கம் அண்மையில் அறிவித்துள்ள இந்தச் சட்டமூலம் முறையான வழிமுறைகளைப் பின்பற்றாமல் கொண்டுவந்ததால் நீதித்துறையின் சுதந்திரம் கடுமையாகச் சீர்குலைந்துவிடும் ஆபத்துண்டு. எனவேமுன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்தை இலங்கை அரசாங்கம் உடனடியாக மறுபரிசீலனை செய்யவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)



## நீதிபதிகள் ஓய்வு வயது நீடிப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்!

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஓக.5

பதவியிலுள்ள உச்ச நீதிமன்ற மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக இருந்தால் அதற்குப் பொதுமக்களின் சர்வஜன வாக்கெடுப்பு கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தீர்ப்பை மேற்கோள்காட்டி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பதவியிலுள்ள நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மாற்றங்களைச் செய்வது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிக்கும். இது அரசியலமைப்பின் 3 ஆவது பிரிவை மீறுவதால் இதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது கட்டாயம். இந்த முன்மொழிவிற்கு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் காமன்வெல்த் சட்டத்தரணிகள் சங்கம் உட்படப் பல்வேறு சர்வதேச சட்ட அமைப்புகளும் ஏற்கனவே பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளன நாட்டில் நீதிமன்றங்களில் சுமார் 11 லட்சம் வழக்குகள் தேங்கிக் கிடக்கும் நிலையில், நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பதால் மட்டும் இந்த வழக்குத் தேக்கத்துக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கும்? அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக இச் சட்டத்திருத்தங்களை முன்னெடுக்காமல், சட்டத்துறை சார்ந்த அனைத்துத் தரப்பினருடனும் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி, நாட்டின் முழுமையான நீதித்துறை மறுசீரமைப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்- என்றார். (ச-இ)

## லால் விஜேநாயக்க இறுதியில் கட்சிக்குத் தலைவணங்குவார்

### நீதியமைச்சர் நம்பிக்கை

கொழும்பு, ஓக.5

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிக்கும் அரசாங்கத்தின் யோசனை தொடர்பில் தமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும், இறுதியில் அவர் கட்சியின் பொதுவான நிலைப்பாட்டுக்குத் தலைவணங்குவார் என நீதி அமைச்சர், சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது அரசாங்கத்துக்குள் அங்கம் வகிப்பவர்களுக்கு இடையே பல்வேறு விவகாரங்களில் வெவ்வேறான கருத்துகள் நிலவினாலும், விவாதங்களின் இறுதியில் அனைவரும் பொதுவான ஒரு நிலைப்பாட்டையே ஏற்பார்கள். கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து இறுதியில் ஒருமைப்பாட்டுக்கு வருவதே உண்மையான ஜனநாயகப் பண்பாடாகும் என்றார். (ச-இ)

## மோட்டார் சைக்கிள்களுக்கென தனியான பிரத்தியேக பாதை!

### அமைச்சர் பிமல் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.5

மோட்டார் சைக்கிள் விபத்துகளைக் குறைத்து வீதிப்பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில், இலங்கையின் முதல் மோட்டார் சைக்கிள்களுக்கான பிரத்தியேக பயணப் பாதை களுவாஞ்சிக்குடிப் பகுதியில் அமைக்கப்படவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மோட்டார் சைக்கிள்களுக்கென வடிவமைக்கப்பட்ட இந்தப் பிரத்யேக பாதை, பிற வாகனப் போக்குவரத்திலிருந்து ரப்பர் தடுப்புகள் மூலம் தனிமைப்படுத்தப்படும் என்றும், அதற்கான வடிவமைப்புப் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். அடுத்த சில மாதங்களுக்குள் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மலேசியா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ள மோட்டார் சைக்கிள் தனிப் பாதைத் திட்டங்கள் விபத்துகளைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைத்துள்ளதன் அடிப்படையிலேயே இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. களுவாஞ்சிக்குடிப் பகுதியில் அதிகளவில் மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படுவதால், அந்தப் பகுதி முன்னோடித் திட்டத்துக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திட்டம் வெற்றிகரமாக அமையுமானால் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்த அரசாங்கம் எதிர்பார்க்கின்றது - என்றார். (ச-இ)

# 11 இலட்சம் வழக்குகள் தேக்கத்துக்கு விசேட நாடாளுமன்றக் குழு நிறுவுக

### எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் பிரேரணை

கொழும்பு, ஓக.5

இலங்கை நீதிமன்ற அமைப்பில் தற்போது 1.1 மில்லியனுக்கும் அதிகமான வழக்குகள் தேங்கியுள்ள பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், வழக்குகளின் விசாரணைகளை விரைவுபடுத்துவதற்குப் நாடாளுமன்ற விசேட குழுவொன்றை நியமிக்க வேண்டும் எனக் கோரி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் பிரேரணையொன்றைக் கையளித்துள்ளது. இந்தப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகரை நேரில் சந்தித்து முறைப்படி கையளிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்கள் உள்ளடங்கலாக 1.1 மில்லியனுக்கும் அதிகமான வழக்குகள் முடிவடையாமல் தேங்கிக் கிடப்பதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. வழக்குகள் பல ஆண்டுகள் இழுபறியாக நீடிப்பதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கும் நிதி இழப்புகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.

நீதிமன்றக் கட்டமைப்பிலுள்ள கட்டமைப்பு ரீதியான குறைபாடுகள், பணியாளர் வெற்றிடங்கள் மற்றும் விசாரணைத் தாமதங்களை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை முன்வைக்க நாடாளுமன்றக் குழு நியமிக்கப்பட வேண்டும் என பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட இந்தப் பிரேரணையின் மூலம் உருவாக்கப்படும் விசேட குழுவின் ஊடாக, தேங்கியுள்ள வழக்குகளை விரைவாக முடிவுக்குக் கொண்டுவரத் தேவையான சட்டச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வீட்டுக்காவலும் சிறையும்!

இலங்கைச் சிறைச்சாலைகளில் தொடர்ச்சியாக உருவெடுத்து வரும் நெரிசல்களுக்கும், அண்மைய மஹர மற்றும் நீர்கொழும்புச் சிறைக் கலவரங்களுக்கும் ஒரு நிலையான தீர்வைக் காணும் நோக்கில், 'வீட்டுக்காவலில் தடுத்து வைக்கும்' மாற்று யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருப்பது வரவேற்கத்தக்க, முற்போக்கான ஒரு நகர்வாகும். தடுப்புக் காவலில் வைத்தல் மற்றும் நீண்டகால சிறைப்படுத்தல்களுக்கு மாற்றீடாக, பொருத்தமான வழக்குகளில் சந்தேகநபர்களையும் சிறு குற்றவாளிகளையும் மின்னணு அல்லது சட்டபூர்வக் கட்டுப்பாடுகளுடன் வீடுகளிலேயே தடுத்து வைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளைச் சட்டவரைஞர் குழு மூலம் விரைவுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பல தசாப்தங்களாகக் காகித அளவிலேயே முடங்கிக் கிடந்த இந்தத்திட்டத்தை மீள நடைமுறைப்படுத்த தற்போதைய அமைச்சரவை முன்வந்திருப்பது, நாட்டின் சிறை நிர்வாகத்தில் ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகும்.

இத்தகையதொரு திட்டத்தை இலங்கை அவசரமாகக் கொண்டுவர வேண்டியதன் பின்னணியில் பல வலுவான காரணங்கள் உள்ளன. நாட்டின் சிறைச்சாலைகளில் அனுமதிக்கப்பட்ட கொள்ளளவை விட மூன்று முதல் நான்கு மடங்கு அதிகமான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானோர் பெரும் குற்றவாளிகள் அல்லர்; மாறாக, சிறு குற்றங்களுக்காகவும், பிணைப் பணத்தைச் செலுத்த முடியாமலும், நீண்டகாலமாக வழக்கு விசாரணைகள் இன்றி விளக்கமறியலில் வாடும் சந்தேகநபர்களே. இத்தகைய நெரிசலினால் சிறைகளுக்குள் சுகாதாரச் சீர்கேடுகள், வன்முறைகள், போதைப்பொருள் புழக்கம் மற்றும் கலவரங்கள் வாடிக்கையாகிவிட்டன. மேலும், ஒவ்வொரு கைதியைப் பராமரிப்பதற்கும் அரச திறைசேரியிலிருந்து பெருமளவிலான மக்கள் பணம் செலவிடப்படுகிறது. இவ்வாறான சூழலில், வீட்டுக்காவல் முறையானது சிறைகளின் நெரிசலைக் கணிசமாகக் குறைப்பதுடன், அரசுக்கான நிதிச் சுமையையும் பெருமளவில் தணிக்கும்.

இந்த வீட்டுக்காவல் திட்டத்தில் பல சாதகங்கள் உண்டு. முதலாவதாக, முதல்முறை தவறிழைத்தவர்கள், வயோதிபர்கள், பாலூட்டும் தாய்மார்கள், பலவீனமான நோயாளிகள் மற்றும் சிறு குற்றங்களில் ஈடுபட்டவர்கள் கொடூரமான குற்றவாளிகளுடன் சிறைகளில் தங்கியிருந்து மேலும் குற்றவாளிகளாக மாறுவது தடுக்கப்படும். இரண்டாவதாக, சந்தேகநபர்கள் தங்களின் குடும்பத்துடனும், சமூகத்துடனும் தொடர்பில் இருந்தவாறே நல்வழிப்படவும், தங்களின் வாழ்வாதாரத்தை ஓரளவு பேணவும் இது வழிவகுக்கும். மூன்றாவதாக, நீதிமன்றக் கட்டமைப்பிலும் சிறைத்துறையிலும் நிலவும் பணிப்பளு பெருமளவில் குறையும். இருப்பினும், இந்தத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் உள்ள பாதகமான மற்றும் சவாலான அம்சங்களையும் அரசாங்கம் அலட்சியப்படுத்திவிட முடியாது. மின்னணுக் கண்காணிப்பு வளையல்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் இலங்கையில் எவ்வளவுக்கு நடைமுறைச் சாத்தியமானவை என்பது பிரதான கேள்வியாகும். கண்காணிப்புப் பொறிமுறை பலவீனமாக இருக்கும் பட்சத்தில், சந்தேகநபர்கள் தலைமறைவாவதற்கோ அல்லது வீடுகளில் இருந்தவாறே மீண்டும் குற்றங்களில் ஈடுபடுவதற்கோ வாய்ப்புகள் அதிகம். அத்துடன், செல்வாக்கும் பணபலமும் படைத்த குற்றவாளிகள் இந்தச்சட்டத்தின் நெகிழ்வுத்தன்மையைப் பயன்படுத்தித் தப்பித்துக்கொள்ளும் அபாயமும் உள்ளது. இதனால், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்காமல் போகும் சூழலும் உருவாகலாம்.

எனவே, இந்த வீட்டுக்காவல் யோசனை வெறும் காகித அளவிலான திட்டமாகவோ அல்லது பணக்காரக் குற்றவாளிகளுக்கான சட்டப் புகலிடமாகவோ மாறிவிடக் கூடாது. கடுமையான கண்காணிப்புப் பொறிமுறைகள், தெளிவான குற்றப் பாகுபாடுகள் மற்றும் வெளிப்படைத் தன்மையான சட்ட விதிகளுடன் இத்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். சர்வதேச அளவில் வெற்றிகரமாக நடைமுறையிலுள்ள மின்னணுக் கண்காணிப்பு முறைகளை இலங்கைச் சூழலுக்கு ஏற்ப வடிவமைத்து, தகுதியான நபர்களுக்கு மட்டுமே இந்தச்சலுகை வழங்கப்படுவதை நீதித்துறையும் பொலிஸாரும் உறுதி செய்ய வேண்டும். அப்போதுதான், சிறைச்சாலைகள் மனித உரிமைகளைப் பேணும் உண்மையான சீர்திருத்தக் கூடங்களாகவும், நாட்டின் சட்டத்தின் ஆட்சி மேலும் பலமடைந்ததாகவும் மாற்றமடையும்!


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்**
**என்னைகொல் ஏதிலார் மாட்டு**

**பொருள்:** நெருங்கிப் பழகியவரின் குற்றத்தையும் புறங்கூறித் தூற்றும் இயல்புடையவர், பழகாத அயலாரிடத்து என்ன செய்வாரோ?






# நாளொன்றுக்கு 2,027 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

கொழும்பு, ஓக.5

**இலங்கையில் நாளொன்றுக்கு சராசரியாக 2,027 புதிய டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.**

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் பதிவாகியுள்ள மொத்த டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 86,947 ஆகப் பதிவாகியுள்ளது எனத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு வெளியிட்டுள்ள அண்மைய தரவுகள் தெரிவித்துள்ளன.

நாடளாவிய ரீதியில் டெங்கு நோயினால் இதுவரை 62 உயிரிழப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாண்டின் ஜூலை மாதத்தில் மிக அதிகளவாக 29,975 டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். ஜூலை மாதத்திற்கு முன்பதாக ஜூன் மாதத்தில் 21,533 தொற்றாளர்கள் பதிவாகியிருந்த நிலையில், ஓகஸ்ட் மாதத்தின் முதல் சில நாள்களிலேயே 1,598 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த நாள்களில் நாளொன்றுக்கு சராசரியாக 2,027 புதிய டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். தென்மேற்குப் பருவமழை பெய்துவரும் சூழலில் நுளம்புகள் உருவாகும் இடங்கள் அதிகரித்து வருவதால், குறிப்பாக மக்கள் அடர்த்தி அதிகமுள்ள நகரப் பகுதிகளில் வாழும் பொதுமக்களை தீவிர விழிப்புணர்வுடன் இருக்குமாறு சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-இ)

# சுற்றுலாவிகள் ஜூலையில் சரிவு

கொழும்பு, ஓக.5

கடந்த ஜூலை மாதத்தில் நாட்டுக்கு வருகைதந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் சிறிய அளவிலான வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. ஜூலை மாதத்தில் மொத்தம் 1,96,845 சர்வதேச சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர். இது கடந்த 2025 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் 1.7% குறைவாகும். இதே வேளை, கடந்த ஜனவரி 1 முதல் ஜூலை 31 வரையிலான 7 மாத காலப்பகுதியில் மொத்தம் 13,43,418 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# கடற்றொழில் தடை நீடிப்பு

கொழும்பு, ஓக.5

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக புத்தளம் முதல் பொத்துவில் வரையான கடற்பரப்பில் தொடர்ந்தும் பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு நிலவுவதால், விதிக்கப்பட்டுள்ள கடற்றொழில் தடை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்துள்ளார். அதற்கமைய புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் பொத்துவில் வரையான கடலோரப் பகுதிகளில் சிறு மற்றும் ஒருநாள் மீன்பிடிப் படகுகள் தொழிலுக்குச் செல்வதற்கான தடை மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ரூபா வீழ்ச்சி

கொழும்பு, ஓக.5

இலங்கையின் வர்த்தக வங்கிகளில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று சிறிதளவு வீழ்ச்சியடைந்துள்ளது. இதன்படி, நாட்டின் பிரதான வர்த்தக வங்கிகளில் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை ரூ.339 முதல் ரூ. 340 வரை பதிவாகியுள்ளது. (ச-இ)

# தொழிலதிபர்கள் குழாம் தமிழகத்திலிருந்து வருகை

தமிழ்நாட்டில் உள்ள 20 தொழிலதிபர்கள் மற்றும் வணிகத் தலைவர்கள் 20 பேரை உள்ளடக்கிய குழுவினர், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை வர்த்தகத்துறைசார் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்ளும் நோக்கில் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர். வர்த்தகம், முதலீடு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி, சுற்றுலா, விவசாயம், உணவு பதப்படுத்தல், உற்பத்தி மற்றும் தொழில் முயற்சி ஆகிய துறைகளில் உள்ள வாய்ப்புகள் குறித்து ஆராய்வதே அவர்களின் இந்த விஜயத்தின் முக்கியமான நோக்கமாகும். (ச-இ)

நாளை
வியாழக்கிழமை- ஆடி-21
06.07.2026
சுபநேரம் : 07.34 – 09.04
ராகுகாலம் : 01.34– 03.04

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## நெல் பெட்டகத்துக்கு மக்களும் தானமிடலாம்

நல்லூர் வடக்கு வாசல் வளைவுத் திறப்பு விழாவில், மாட்டுவண்டிலில் எடுத்து வரப்படும் நெல் பெட்டகத்துக்கு, பொதுமக்களும் நெல் காணிக்கை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.வரலாற்றுச்சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வடக்குத் திசையில் கோவில் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அலங்காரத் தோரண வாசலான நல்லூரான் வடக்கு வாசல் வளைவு நாளை வியாழக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது. இதன் போது நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலிலிருந்து சமய அனுஷ்டானங்களுடன் நெல் மணிகள் நிரம்பிய பெட்டகம், இரட்டைத் திருக்கை காளை மாட்டு வண்டிலிலல் மங்கள வாத்தியங்கள் முழங்க எடுத்து வரப்படும். வண்டில் சட்டநாதர் வீதிவழியாக முடமாவடிச்சந்தியை அடைந்து, வளைவைநோக்கிப் புறப்படும். இந்தத் தருணத்தில் மாட்டு வண்டிலில் வைக்கப்படும் நெல் பெட்டகத்தில் பொதுமக்களும் நெல் காணிக்கை செய்ய முடியும்.தொடர்ந்து நெல் பெட்டகம் நல்லூரானின் திருவடிகளில் சமர்ப்பிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-66)

### யாழ்ப்பாண மாநகர சபை
### நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்த வாசல் வளைவு காண்பிய விரிப்பு நிகழ்விற்கான வீதித்தடை தொடர்பானது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வாசல் வளைவு காண்பிய விரிப்பு நிகழ்வு எதிர்வரும் 06.08.2026 ஆம் திகதி நடைபெறவுள்ளதால் நிர்மாண நிறைவு பணிகளுக்காகவும். திறப்பு விழா நிகழ்விற்காகவும் எதிர்வரும் 05.08.2026 ஆம் திகதி அதிகாலை முதல் 06.08.2026 ஆம் திகதி மதியம் வரை தற்காலிகமாக வீதிகள் தடைசெய்யப்படவுள்ளது. இதன்போது கந்தர்மடத்திலிருந்து அரசடி வீதியால் வரும் வாகனங்கள் பருத்தித்துறை வீதி ஊடாகவும். கோயில் வீதியால் நல்லூரை நோக்கி வரும் வாகனங்கள் சிவன் அம்மன் வீதியினூடாக பயணிக்க முடியும்.

கோயில் தெற்கு வீதியின் ஊடாக கோயில் வீதியில் வரும் வாகனங்கள் பருத்தித்துறை வீதி ஊடாகவும் சங்கிலியன் வீதியால் வரும் வாகனங்கள் நல்லூர் பிரதேச செயலக வீதியினூடாக பருத்தித்துறைவீதியை அடைந்து பயணிக்கமுடியும்."

இதன் போது பொதுமக்கள் மாற்றுப்பாதை ஒழுங்குகளை கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முதல்வர்
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடங்கள்

யாழ் போதனா வைத்தியசாலைக்கு தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை (ஆண், பெண்)

- க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- உடல், உள தகுதி சீராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 20 இலிருந்து 50 வயது வரை.

**தேவையான ஆவணங்கள்:**

- தேசிய அடையாள அட்டை பிரதி,
- கிராம சேவையாளரது நற்சான்றிதழ் (ஆறு மாதங்களுக்கு உட்பட்டது)


**நேர்முகத் தேர்வு :**

இடம் : 758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காலம் : 06.08.2026 தொடக்கம் 16.08.2026 வரை (ஞாயிறு தவிர்ந்த)
நேரம் : காலை 9.00 மணிலிருந்து மாலை 4.00 மணிவரை

**குறிப்பு :** சம்பள நிர்ணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியம் என்பன வழங்கப்படும்.

**தொடர்பு : 021 222 5102**

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 08 . 1988 — மறைவு 03 . 08 . 2026

### அருணாசலம் துசாபரன்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் துசாபரன் 03.08.2026 அன்று அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னலட்சுமி, பேரம்பலம் பவளம்மா ஆகியோரின் பேரனும், அருணாசலம் - மனோறஞ்சினி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற லதாசினி மற்றும் காஞ்சனா, அரவிந்தி சயந்தி, திவாகர், பிரதாபன் ஆகியோரின் சகோதரனும், கௌதமி, சிவாராசா, பிரதீபன் ஆகியோரின் மைத்துனரும், பிரியாலதா, தஸ்வின், திவாசினி, ஜருசிகன், மதுரிகா ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2026) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் காந்தாளம் பிட்டி இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆறுமுகம் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 967 2340

(cr.47878 N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 07 . 1949 — மறைவு 04 . 08 . 2026

### தில்லையம்பலம் தவமலர்

அல்லைப்பிட்டி, 2ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், உடையார் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் தவமலர் அவர்கள் நேற்று (04.08.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதமுத்து - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - விஷாலாட்சி தம்பதியரின் மருமகளும், தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகாதேவன், சிவபாதம், காலஞ்சென்ற சிவபாலன், ரஞ்சிதமலர், குணபாலசிங்கம், சிவசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலேஸ்வரி, சுதாஜினி, சுதாகரன், இறாஜினி (ஆசிரியர்), தசிகரன் (Technical officer - IT, Singer) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஶ்ரீதரன், சுதாகர், சுபாஷ்கரன் (ஆசிரியர்), தாக்ஷாயினி (NSB Chankanai Branch) ஆகியோரின் அன்பு மாமியாரும், சதுர்ஜன், சதுர்சிகா, தனோஜன், சர்வீகன், அஸ்வின், அகர்யன், யனுஸ்கா, யதிறின், ஹரினி, அக்ஷரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜகானாவின் அன்பு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2026) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 308 3007, 077 818 4875

(CS/32274) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 01 . 1963 — மறைவு 02 . 08 . 2026

### சதாசிவம் சாந்தலிங்கம்

**(முன்னைநாள் 30-2144 பஸ் உரிமையாளர்)**

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சிவக்கொழுந்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், சத்தியராதா அவர்களின் கணவரும், தர்ஷிகா (Swiss), மதுரா (Merchantile Security Company), கஜமுகன் (HNB Finance) ஆகியோரின் தந்தையும், சிவறமணன் (Swiss), மயூரன் (யாழ் பல்கலைக்கழகம்), அஜந்தினி ஆகியோரின் மாமனாரும், ஆத்மிகா, சர்விகா ஆகியோரின் அன்புப் பேரனும், அரியமலர், காலஞ்சென்றவர்களான புனிதமலர், கணேசலிங்கம், கருணாகரலிங்கம், சறோஜினி தேவி, சுந்தரலிங்கம் பரமலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் சகோதரனும், சத்தியமாலா, அமரர் சத்தியபாமா, அமரர் அருணாசலம், நேசகுமாரி, சுபத்திரா, சிவகலை, வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

தகவல்: பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், மருமக்கள்.

(CS 322775)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05.08.2026
புதன்கிழமை

புதன் பொய்கை

சந்தோசம் வரும்போது
அதைப்பற்றி
சிந்தனை செய்யாதே;
அது போகின்ற போது
அதைப்பற்றியே
சிந்தனை செய்!

-அரிஸ்டாடில்

# சிற்றிதழ்களும் மகுட வாசகங்களும்



சி.விமலன்

ஈழத்தில் இருந்து வெளிவந்த மற்றும் வெளிவந்து கொண்டிருக்கும் சிற்றிதழ்களில் அவற்றின் இலக்கிய நோக்கை வெளிப்படுத்தும் விதமாக பிரபல கவிஞர்களின் கவிதைகள் அல்லது தாங்களே இரத்தினச் சுருக்கமாக மனதில் நச்சென்று பதியும் படியாக ஓரிரு வரிகளை ஆசிரியர்கள் பயன்படுத்தி இருப்பார்கள். இவ்வரிகள் ஒவ்வொரு இதழிலும் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் இருக்கும்.

அந்தவகையில் டொமினிக் ஜீவா வெளியிட்ட 'மல்லிகை' இதழில் பாரதியின் கீழ்க்காணும் வரிகளை பயன்படுத்தி இருப்பார்.

'ஆடுதல், பாடுதல், சித்திரம் கவியாதியினைய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர் ஈன நிலைகண்டு துள்ளுவர்'

அதுபோல 'சிரித்திரன்' சுந்தர் தனது இதழில் 'செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்' என்ற வரிகளை எழுதியிருப்பார்.

'ஞானம்' இதழில் தி.ஞானசேகரன் 'பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்' என்ற வரிகளையும்

'ஜீவநதி' இதழில் பரணீதரன், பாரதிதாசனின்
'அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!' என்ற கவிதை வரிகளையும் பயன்படுத்தியிருப்பார்.


அம்பலம் இதழில் 'ஊர்கூடித் தேரிழுப்போம்' என்று மஹாகவியின் கவிதையின் வரிகளின் தாக்கத்தால் உண்டான மகுடவாசகம் பயன்படுத்தப்பட்டது.

'எதுவரை' இதழில் பௌஸர்
'மரணத்திலிருந்து வாழ்விற்கு...' எனக் குறிப்பிட்டிருந்தார்.

அநுராதபுரத்தில் இருந்து வசீம் அக்ரம் வெளியிட்டு வந்த 'படிகள்' இதழில்
'நல்லன காணவும்
நல்லவற்றுடன்
இணையவும் முயல்பவர்களின்
எண்ணிக்கை
சிறியதாக இருப்பினும்
அது முயற்சியின்மையிலும் பார்க்க மேலானது'
என்ற வரிகளைக் காணலாம்.

'தாயகம்' இதழில்
'புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு'
என்ற வரிகள் இடம்பெற்றிருக்கும்.

அதுபோல மைக்கல் கொலின் வெளியிட்ட







'மகுடம்' இதழில் 'மானுடம்
சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்' என்ற வரிகள் உள்ளன.

தற்போது பிரான்ஸில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'வளர்' சிற்றிதழில் கணியன் பூங்குன்றனாரின் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற வரிகள் அட்டைப் படத்திலேயே பிரசுரமாகி இருக்கும்.



அதேவேளை, மகுட வாசகங்களைக் கொண்டிருக்காமலே ஈழத்தில் பல சிற்றிதழ்கள் வெளிவந்தன, வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அந்தவகையில் அலை, வியூகம், சரிநிகர், பெருவெளி, கலைமுகம் என்பவை அவற்றிற்குச் சில உதாரணங்கள்.


இதை ஏன் இப்போது நினைவுபடுத்துகிறேன் என்றால் அண்மையில் 'எங்கள் முற்றம்' சிற்றிதழின் 17ஆவது இதழைப் படித்தபோதுதான் ஒன்றைக் கவனித்தேன். அந்த இதழிலும் பாரதியின் வரிகளான 'ஆடுதல், பாடுதல், சித்திரம் கவியாதியினைய கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர் ஈனநிலைகண்டு துள்ளுவார் அவர் நாடும் பொருள்கள் அனைத்தையும் சில நாளினில் எய்தப் பெறுகுவார் அவர் காடு புதரில் வளரினும் தெய்வக் காவனம் என்றதைப் போற்றலாம்!'

என்பதைத்தான் அவர்களும் மகுட வாசகமாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். பாரதியின் கவிதை வரிகளை மகுட வாசகமாக 'மல்லிகையும்', 'எங்கள் முற்றமும்' தெரிவு செய்தாலும் அதனைப் பயன்படுத்தியதில் ஒரு முக்கியமான வேறுபாட்டையும் அவதானிக்க முடிகிறது. 'மல்லிகை' பாரதி யார் கவிதையின் முதல் நான்கு வரிகளையும் பயன்படுத்த, 'எங்கள் முற்றம்' அந்தக் கவிதையின் எட்டு வரிகளையும் பயன்படுத்தி உள்ளது.

நாட்டுடமை ஆக்கப்பட்ட பாரதியின் பாடல்களை எந்தவொரு தனிநபரும் குழுவினரும் எப்படியும் பயன் படுத்துவதில் எந்தவிதமான முரண்பாடுகளும் எனக்கு இல்லை.

ஆனாலும் ஈழத்தில் இருந்து 'மல்லிகையை' தனியொருவராக அதிகபட்ச எண்ணிக்கையான 400 இதழ்கள் வரை வெளிக்கொணர்ந்தவர் டொமினிக் ஜீவா. அவர் தனது இதழில் பயன்படுத்திய பாரதியின் வரிகளை ஈழத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் இன்னொரு இதழும் பயன்படுத்த வேண்டுமா? என்ற கேள்வி எழுவதைத்தான் இவ் விடத்தில் தவிர்க்கமுடியவில்லை. 'மல்லிகை' இதழில் வெளிவந்த இந்த வரிகளை 'எங்கள் முற்றம்' குழுமத்தினர் தெரிந்து பயன்படுத்தினார்களா இல்லை தெரியாமல் பயன்படுத்தினார்களா என்பதையோ... 'மல்லிகை' இதழ் தனது வருகையை நிறுத்திய பின்னரே 'எங்கள் முற்றம்' இதழ் ஈழத்தில் வெளிவரத் தொடங்கியது. அதனால்தான் பாரதியின் அதே வரிகளைப் பயன்படுத்தினார்களா? என்பதையோ... என்னால் அறியமுடியவில்லை. ஆனாலும் குறைந்தபட்சம் 'மகுட வாசகம்' போன்ற விடயங்களிலாவது ஒவ்வொரு சிற்றிதழும் தனித்துவத்தை பேணும் வகையில் அதனைத் தெரிவு செய்திருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாரதி 'சக்தி'

**கிருஷ்ணா**

இணையத்தில் உலாவிக்கொண்டிருந்தபொழுது தற்செயலாக தமிழ் மின் நூலகத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து சொக்கன் தொகுத்த பாரதியின் சக்திப் பாடல்கள் புத்தகம் கிடைத்தது. பாரதியார் எழுதிய பராசக்தி மற்றும் காளி பற்றிய பாடல்களை ஒன்றாக தொகுத்துத் தந்துள்ளார் சொக்கன். இப்பொழுதுள்ள செயற்கை நுண்ணறிவு யுகத்தில் இதெல்லாம் ஒரு நிமிடத்தில் முடித்துவிடலாம். இந்த புத்தகம் 1982ஆம் ஆண்டு வெளிவந்திருக்கிறது. பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. அவற்றின் தெளிவுரையையோ அல்லது அந்தக் கவிதைகளைப் பற்றிய அவரது புரிதல்களையோ காணமுடியவில்லை. ஆயினும் சக்தி பற்றிய அனைத்துக் கவிதைகளையும் ஓரிடத்தில் காணும்பொழுது மகிழ்ச்சி.

ஏறக்குறைய எல்லாப் பாடல்களையும் ஏற்கனவே படித்திருக்கிறேன் என்றாலும், சில பாடல்கள் மனதுக்கு மிக நெருக்கமானவை. குறிப்பாக பாரதியின் 'மஹாசக்திக்கு விண்ணப்பம்'. இந்தப் பாடலைப் படிக்கும் பொழுது நெஞ்சமெல்லாம் கிளர்ந்தெழும். மகாராஜபுரம் சந்தானத்தின் குரலில் இந்தப் பாடலை கேட்கும்பொழுது கண்ணீர் பெருகி ஓடும்.

'உள்ளம் குளிராதோ?பொய்யாணவ
ஊனம் ஒழியாதோ?
கள்ளம் உருகாதோ? அம்மா! பக்திக்
கண்ணீர் பெருகாதோ?
வெள்ளைக் கருணையிலே இந்நாய் சிறு
வேட்கை தவிராதோ?
விள்ளற் கரியவளே அனைத்திலும்
மேவி யிருப்பவளே!'


அன்னையை எவ்வாறு பார்க்கமுடியும்? அவளைச் சொற்களில் எளிதாக அடக்கிவிட முடியாது. சொற்களின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டு நிற்பவள் அவள். அவ்வாறென்றால் சக்தியை எவ்வாறு உணர முடியும்? தாமரையில் பிரகாசமான ஒளியில், கருங்கல்லில் அறிவு ஒளியைக் காணும் கண்களில், கால வெள்ளத்தில் நிலைத்து நிற்பதைக் காண்கையில், புல்லின் நுனியில் வைரத்தைப் பார்க்கையில் அன்னை பராசக்தியைக் காணமுடியும் என்கிறான் மகாகவி.

'சொல்லினுக் கெளிதாக
நின்றிடாள், சொல்லை வேறிடஞ்
செல்ல வழிவிடாள், அல்லி
னுக்குட் பெருஞ்சுடர் காண்பவர்
அன்னை சக்தியின் மேனி
நலங்கண்டார், கல்லினுக்குள்
அறிவொளி காணுங்கால், கால
வெள்ளத்திலே நிலை காணுங்
கால், புல்லினுள் வயிரப்படை
தோன்றுங் கால் பூதலத்தில்
பராசக்தி தோன்றுமே!'

பாரதியின் ஊழிக்கூத்து எனக்குப் பிடித்த மற்றோடு பாடல். கற்றது தமிழ் படத்தில் ஜீவா, தகவல் தொழில் நுட்பச் சேவைத்துறையில் வழிமறித்து 'நன்றாக ஆங்கிலம் பேசுகிறாயே. நான் சொல்லும் இந்த பாரதியார் பாடலைத் திரும்பிச் சொல்ல முடியுமா?' என்று சவால் விடுவார். அந்தப் பாடலின் கர்ஜனை இன்னும் நெஞ்சில் நிற்கிறது.

'வெடிபடு மண்டத் திடிபல தாளம் போடவெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம் பாடபாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற் கூடக்களித்
தாடுங் காளீ! சாமுண் டீ! கங் காளீ!
அன்னை! அன்னை! ஆடுங் கூத்தை
நாடச் செய்தாய் என்னை.'

பாரதி பெண்ணுரிமை என்பதை வெறும் பேச்சில் மட்டும் கொண்டவனில்லை. பெண்களை சக்தியின் வடிவமாகக் கண்டவன். பராசக்தி, மகாகாளி, தேச முத்துமாரி எல்லாம் அவன் குலதெய்வங்கள். போலி பகுத்தறிவு பேசிய பேதைகள் உலகில் உண்மையான சக்தியைப் பாடியவன்.



# இன்றைய முதியோரின் நிலை பற்றிய ஒரு பார்வை

பாரினிலே பாலகனாய் வந்துதித்தோம்
படிப்படியாய் பல வருடம் கடந்து வந்தோம்
பாலகனாய் இருந்தபோது அரவணைப்பு
முதிர்வயதை அடையும்போது புறக்கணிப்பு

குழந்தைகளாய் இருந்தபோது உறவு பல
வாலிபத்தை அடைந்தபோது நினைவு பல
இல்வாழ்வை நிறைவுடன் ஏற்றிருந்தோம்
இதன் மூலம் சந்ததியை பெருக வைத்தோம்

வீட்டில் மணமகனோ மணமகளோ புகுந்தபோது
புதியதொரு சூழ்நிலைக்கு முகம் கொடுத்தோம்
அவர் பிள்ளை, அவர் துணைவர் என்ற பாசம்
தலை தூக்க முதியவர் நாம் ஒதுங்கி நின்றோம்

அரசாங்கம் எமை நோக்கி விழிக்கின்றது
அதற்கான திட்டம் பல வகுக்கின்றது
முதியோர்கள் கொடுப்பனவும்
அரைகுறை தான் - ஆனால்
அதுவும் இல்லையென்றால் நடுத்தெரு தான்

முதிர்வயதில் அலையாத அலைச்சல் இல்லை
அமைதியில்லை சாந்தியில்லை
எதுவுமேயில்லை - நாம்
இறந்தவுடன் வலம்வந்து வணங்கிச்செல்வர் அங்கு
வேதாந்தம் பேசிவிட்டு கலைந்து செல்வர்

பாடைதனை பார்த்தால் அது சப்பறம் தான்
/ ஊர்வலத்தில் / மரண ஊர்வலத்தில்
மேளச்சத்தம் வெடிச்சத்தம் அது இடிமுழக்கம்
கண்ணில் காணும் சந்தியெல்லாம் கச்சேரி
சுடலை செல்லும் வீதி எங்கள் குத்தகை தான்

உயிரோடு இருந்தபோது அரைவயிறு
படுத்துறங்க ஒழுங்கான பாய் இல்லை
பழஞ்சோறோ பாண்துண்டோ
கொடுப்பாரில்லை - ஆனால்
வெளிநாட்டில் மக்கள் என்ற படக்காட்சி

ஆலயத்தில் வழிபாடு சட்டப்படி
வாழைமரம் தோரணங்கள் சோடினைகள்
இரங்கலுரை கேட்டாலே புல்லரிக்கும்
மனம் கசந்து அழுவது போல் புதுநடிப்பு

அந்தியேட்டி வந்து விட்டால் அன்னதானம்
அறுசுவையில் கறிசோறு வடை பாயாசம் - எம்மை
மறவாமல் இருப்பதற்கு ஒரு செம்பு
அன்று முதல் அவர் நினைவும் மறைந்து விடும்

**ஆக்கம்- மக்கள் கவிஞன்**



# 'இல்லாமையின் புவியியல்'

பாக்கியநாதன் அகிலனின் 'இல்லாமையின் புவியியல்' கவிதைத் தாபனக்கலைக் காட்சி கலம் நிறுவனத்தில் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்றது. அதன் பதிவுகள் சில..!

படங்கள்: பிறைநிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தீபெத் - தாய்வான்:





ஐங்கரன்

# சீனாவின் இரட்டை நிலை ஆதிக்க அரசியல்!

தென்கிழக்கு ஆசியாவின் இந்த நூற்றாண்டு உலக அரசியலில், திபெத் மற்றும் தாய்வான் ஆகிய இரு பிராந்தியங்களும் மிக முக்கியமான பேசுபொருள்களாக உருவெடுத்துள்ளன. சீனாவின் தேசிய ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் பிராந்திய ஆதிக்கம் தொடர்பான விவாதங்களின் மையப்புள்ளியாக இவ்விரு தேசங்களும் விளங்குகின்றன. ஆனால், திபெத்தையும் தாய்வானையும் பெய்ஜிங் அணுகும் விதம் குறித்து சர்வதேச அளவில் பல்வேறு கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக, மக்களின் சுயநிர்ணய உரிமை என்று வரும்போது சீனா கடைப்பிடிக்கும் நிலைப்பாடு பலரால் ஒரு தெளிவான 'இரட்டை நிலை ஆதிக்க அரசியல்' என்றே கருதப்படுகிறது.

**ஆசியாவின் கூரையை மூடிய சீன நிழல்**

'ஆசியாவின் கூரை' என வர்ணிக்கப்படும் திபெத், பல நூற்றாண்டுகளாகத் தனக்கேயான தனித்துவமான பௌத்த மதம், ஆழமான கலாசாரம் மற்றும் சுயாட்சி அரசியல் அடையாளத்தைக் கொண்டிருந்தது. 1949ஆம் ஆண்டு மாசேதுங் தலைமையில் 'மக்கள் சீனக் குடியரசு' நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, 1950ஆம் ஆண்டில் சீன மக்கள் விடுதலைப் படை திபெத்துக்குள் அதிரடியாக நுழைந்தது. பின்னர் 1951இல் திணிக்கப்பட்ட 'பதினேழு அம்ச ஒப்பந்தம்' மூலம் திபெத் சீனாவின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டதாக பெய்ஜிங் இன்றும் வாதிடுகிறது. ஆனால், பல திபெத்தியர்கள் இந்த ஒப்பந்தம் சுதந்திரமான சூழலில் ஏற்படுத்தப்படவில்லை என்றும், துப்பாக்கி முனையில் உருவான அரசியல் அழுத்தத்தின் விளைவே இது என்றும் கூறுகின்றனர்.

இதன் விளைவாக, 1959ஆம் ஆண்டு திபெத்தின் தலைநகரான லாசாவில் வெடித்த வரலாற்றுப் புகழ்பெற்ற மக்கள் எழுச்சி சீனாவால் கொடூரமாக அடக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, திபெத்தின் ஆன்மிக மற்றும் அரசியல் தலைவரான 14 ஆவது தலாய் லாமா தனது மக்களுடன் இந்தியாவுக்கு அகதியாக வர நேரிட்டது. அதன் பின்னர், இந்தியாவின் தரம்சாலாவில் இருந்தபடி 'திபெத் அகதிகளின் நாடுகடந்த அரசாங்கம்' இன்றுவரை இயங்கி வருகிறது. திபெத்தில் சாலைகள், ரயில்கள், நவீன கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் தான் பெரும் முதலீடுகளைச் செய்துள்ளதாகவும், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் சீனா கூறினாலும், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் திபெத்தியர்களின் மதச் சுதந்திரம், மொழி உரிமை மற்றும் கலாசார அடையாளம் திட்டமிட்டு அழிக்கப்படுவதாகத் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன.


**தாய்வானைக் குறிவைக்கும் 'ஒரே சீனா' கொள்கை**

மறுபுறம், தாய்வானின் வரலாறு திபெத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. 1949ஆம் ஆண்டு சீன உள்நாட்டுப் போரில் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்ற போது, தோற்றுப்போன சியாங் காய்ஷெக் தலைமையிலான தேசியவாத அரசு தாய்வான் தீவுக்குத் தப்பி ஓடி, அங்கு தனது ஆட்சியை நிறுவியது. அன்று முதல் இன்றுவரை தாய்வான் தனக்கெனத் தனித்த அரசியல் அமைப்பு, பலமான ஜனநாயகத் தேர்தல் முறை மற்றும் உலகத்தரம் வாய்ந்த சுயாதீனப் பொருளாதாரக் கட்டமைப்புடன் ஒரு தனிநாடாகவே செயற்பட்டு வருகிறது.

இருப்பினும், 'ஒரே சீனா' என்ற ஒற்றைக் கொள்கையின் அடிப்படையில், தாய்வான் தனது நாட்டை விட்டுப் பிரிக்கமுடியாத ஒரு மாகாணம் என சீனா தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறது. தாய்வானை முழுமையாகத் தன்வசப்படுத்த இராணுவ அழுத்தம், பொருளாதாரச் செல்வாக்கு மற்றும் சர்வதேச இராஜதந்திரத் தனிமைப்படுத்தல் ஆகிய மூன்று கூர்மையான ஆயுதங்களைச் சீனா பயன்படுத்தி வருகிறது. சீனப் போர் விமானங்களும் அதிநவீன கடற்படைக் கப்பல்களும் தாய்வானைச் சுற்றியுள்ள கடல் மற்றும் வான் எல்லைகளில் அடிக்கடி அச்சுறுத்தும் வகையில் போர் ஒத்திகைகளை மேற்கொள்கின்றன. அதேநேரம், தாய்வானின் முக்கியமான வர்த்தகக் கூட்டாளியாகத் தான் இருக்கும் பலத்தைப் பயன்படுத்தி, அதன் பொருளாதாரத்தை நசுக்க முயல்கிறது. மேலும், ஐ.நா. சபை உள்ளிட்ட உலக அரங்குகளில் பல நாடுகள் தாய்வானைத் தனிநாடாக அங்கீகரிக்க முடியாதவாறு தனது வீட்டோ அதிகார அரசியல் மூலம் முட்டுக்கட்டைகளையும் போட்டு வருகிறது சீனா.

**வல்லரசின் இரட்டை நிலையும் சர்வதேச விமர்சனமும்**

திபெத் மற்றும் தாய்வான் விவகாரங்களில் எழும் மிக அடிப்படையான கேள்வி மக்களின் 'சுயநிர்ணய உரிமை'பற்றியதாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகள் மற்றும் இறையாண்மை குறித்து ஐ.நா. மேடைகளில் முழங்கும் சீனா, தனது எல்லைக்குள் இருக்கும் திபெத் மற்றும் தாய்வான் போன்ற பகுதிகளில் அதே கொள்கையை ஏற்கத் தயாராக இல்லை என சர்வதேச அரசியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். திபெத்தியர்களின் ஆன்மிக-கலாசார அடையாளமும், தாய்வானிய மக்களின் தாராளமய ஜனநாயக விருப்பங்களும் மதிக்கப்பட வேண்டும் என்பதே மனித உரிமை ஆர்வலர்களின் வாதம்.



ஆனால், சீனாவின் உலகப் பார்வை முற்றிலும் வேறானது. திபெத்தும் தாய்வானும் வரலாற்று ரீதியாக சீனாவின் பூர்வீகப் பகுதிகள் என்பதால், இவை தங்களின் அசைக்கமுடியாத உள்நாட்டு விவகாரங்கள் என சீனா திட்டவட்டமாகக் கூறுகிறது. தேசிய ஒருமைப்பாட்டையும் பிராந்திய இறையாண்மையையும் எத்தகைய விலை கொடுத்தாவது பாதுகாப்பது ஒரு நாட்டின் அடிப்படை உரிமை என்றும் பீஜிங் வாதிடுகிறது.

**உலக ஒழுங்கின் எதிர்காலச் சோதனைக்களம்**


திபெத் மற்றும் தாய்வான் தொடர்பான விவகாரங்கள் வெறும் நிலப்பரப்பு சார் அரசியல் கேள்விகள் மட்டுமல்ல. அவை சுயநிர்ணய உரிமை, தேசிய இறையாண்மை, மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சர்வதேசச் சட்டம் ஆகியவற்றின் சந்திப்பில் நிற்கும் சிக்கலான உலகப் பிரச்சினைகளாகும். திபெத்தில் ஒரு தொன்மையான இனத்தின் கலாசார மற்றும் மத அடையாளப் பாதுகாப்புப் பற்றிய விவாதம் நடைபெறுகிறது; அதேவேளை, தாய்வானில் ஒரு முற்போக்கான ஜனநாயகச் சமூகத்தின் அரசியல் எதிர்காலம் குறித்த கேள்வி எழுகிறது.

இந்த இரு விவகாரங்களும் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தின் எதிர்கால அமைதியையும், உலக வல்லரசுகளின் பலப்பரீட்சையையும் தீர்மானிக்கும் முக்கியமான காரணிகளாக உள்ளன. சீனாவின் ஆதரவாளர்கள் இதனை இறையாண்மையைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகக் காண்கையில், சர்வதேச அரசியல் விமர்சகர்கள் இதனைச் சீனாவின் இரட்டை நிலை ஆதிக்க அரசியல் என்றே அப்பட்டமாகக் கருதுகின்றனர். எனவே, இப் பிரச்சினைகள் சீனாவின் உள்நாட்டு விவகாரம் என்ற எல்லையைத் தாண்டி, உலகளாவிய ஜனநாயகம் மற்றும் புதிய உலக ஒழுங்கு குறித்த சோதனைக் களங்களாக எதிர்காலத்திலும் தொடர்ந்து நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள் ஐ. சிவசாந்தன்





# “நல்லூரான் வடக்கு வாசல் வளைவு”

## ஓகஸ்ட் 6அம் திகதி காண்பிய விரிப்பு!




அலங்காரக் கந்தனாம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருமையை மேலும் மெரு கூட்டும் வகையில், ஆலயத்தின் வடக்குத் திசையில் கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரத் தோரண வாசலான 'நல்லூரான் வடக்கு வாசல் வளைவு', ஆடிக்கார்த்திகை நன்னாளான 2026 ஓகஸ்ட் 6ஆம் நாள் (வியாழக்கிழமை) தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12மணிக்கு காண்பிய விரிப்புக் காணவுள்ளது.

இதனை முன்னிட்டு, அன்று காலை 10.30 மணிக்கு சட்டநாதர் சிவன் கோவிலிருந்து சமய அனுஷ்டானங்களுடன், நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்தை ஏற்றிய இரட்டைதிருக்கை காளை மாட்டுவண்டில் மங்கல வாத்தியங்கள் முழங்க வளைவை நோக்கிப் புறப்படும்.

தெய்வேந்திர முகூர்த்தமாகிய நண்பகல் 12மணிக்கு, எம்பெருமானுக்காக அழைத்துவரப்பட்ட நெல் மணிகள் நிரம்பிய பெட்டகத்துடன் வரும் காளை மாட்டுவண்டில் முதன்முறையாக புதிய வளைவின் ஊடாகச் செல்லும். அந்த மங்கல நிகழ்வின் மூலம் 'நல்லூரான் வடக்கு வாசல் வளைவு' காண்பிய விரிப்புக் காணும்.

யாழ்ப்பாணத்தின் கந்தபுராண மரபையும் கலாசாரப் பாரம்பரியத்தையும் எடுத்தியம்பும் வகையில் இவ்வளைவு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ■

# எல்லாக் காலி அறைகளிலும்..!



■ ஆனந்தன்

*'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்*
*மாண்டார் வருவரோ மாநிலத்தீர் வேண்டா!*
*நமக்கும் அதுவழியே! நாம்போம் அளவும்*
*எமக்கென்? என்(று) இட்டு, உண்டு, இரும்'*

கடந்த வருடத்துக்கான சிறந்த ஆவணப்படத்துக்கான ஒஸ்கார் விருதினை 'எல்லாக் காலி அறைகளிலும்'( All the Empty Rooms ) என்ற ஆவணப்படம் வென்றது. இந்த ஆவணப்படம் அமெரிக்காவில் பள்ளிக்கூடங்களில் நடந்த கொடூரத் துப்பாக்கிச்சூடுகளில் இறந்த நான்கு குழந்தைகளின் காலி அறைகளைப் படம் பிடித்திருக்கிறது.



அமெரிக்காவின் துப்பாக்கிக் கலாசாரம் எந்த அளவுக்கு நாட்டைச் சீரழித்திருக்கிறது என்பதை இந்த ஆவணப்படம் சொல்லாமல் சொல்கிறது. குழந்தைகளின் பெற்றோர் இறந்து போன நான்கு குழந்தைகளின் காலி அறைகளுக்குச் செல்கிறார்கள். அந்தக் காலி அறைகளில் பெற்றோர் அவர்களின் நினைவுகளைத் தேக்கிவைத்திருக்கின்றனர். ஒரு குழந்தையின் அறையினுள் அவரது தாயார் அவனது அழுக்குத் துணிகளை துவைக்காமல் வைத்திருக்கிறார். ஏனென்றால் அவனது வாசம் அப்பொழுது இங்கு இருக்கும் என்கிறார். கண்ணில் நீர் வராமல் நீங்கள் பார்க்கவே முடியாது.

இன்னொரு இறந்துபோன குழந்தையின் சகோதரர்கள் “என் தங்கை தான் சிறந்தவள். நாங்கள் இழந்து வாடுகிறோம்” என்று சொல்கின்றனர். மற்றொரு குழந்தையின் தந்தை “எனக்கு அவளின் நினைப்பு வரும்போதெல்லாம் அவளது படுக்கையின் மெத்தையில் உட்கார்ந்து கொண்டு அழுவேன்” என்கிறார்.

வெறும் 33 நிமிடங்களில் ஒரு காத்திரமான படைப்பைக் கொடுக்க முடியுமா? கொடுத்திருக்கிறார்கள். அமெரிக்காவின் விஷேசம் என்னவெனில் அங்கே தான் உலகத்தின் மாபெரும் கொடுமைகள் நடக்கும். ஆனால் அதேவேளையில் அதனைப் பற்றிய சுதந்திரமான, நடுநிலையான ஆவணங் களும் அவர்களால் படைக்க முடியும். சுதந்திரத்தின் நிலம் அது. செஞ்சோலையில் விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 53 பெண் பிள்ளைகளைப் பற்றி ஒரு நடுநிலையான ஆவணப்படம் இங்கே எடுக்கமுடியுமா? என்ற கேள்வியில் தான் நமது நேர்மையை அளவீடு செய்துகொள்ள முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**THE ROYAL COLLEGE OF JAFFNA**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள்
பாடசாலையில் பாடங்களில்
50 மதிப்பெண்கழுக்கு குறைவாக
எடுக்கின்றார்களா? அப்படியாயின்
சிறு குழுக்களாக எம்மிடம் பயில்வதன் மூலம்
கூடிய மதிப்பெண்களைப் பெறமுடியும்.
**குபேரன் கட்டடம், சங்கானை.**
தொடர்பு: **077 675 1649**
(ரு 62018) N

# மன்னார், முல்லைத்தீவுக்கு விரைவில் சி.ரி.ஸ்கானர்கள்

## சுகாதார அமைச்சர் உறுதி

மன்னார், ஓக.5
மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவ மனைகளில் சி.ரி. மற்றும் எம்.ஆர்.ஐ ஸ்கேனர் வசதிகள் மிக விரைவில் வழங்கி வைக்கப்படும் என சுகாதார அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விடைக்கான வினா நேரத்தின்போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங் களில் சி.ரி. மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேனர் வசதிகள் இல்லாததால், தினமும் நூற்றுக்கணக் கான நோயாளர்கள் பரிசோதனைகளுக்காக வவுனியா உள்ளிட்ட வெளிமாவட்ட மருத்துவமனைகளுக் குப் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சென்றுவர வேண்டியுள்ளது.

இதனால் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டப் பொதுமருத்துவமனைகளுக்குக் காலதாமதமின்றி துரித கதியில் சி.ரி. மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேனர்களை வழங்க நட
வடிக்கை எடுக்குமாறு ரவிகரன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர்,
முல்லைத்தீவு மாவட்டப் பொதுமருத்துவ மனையின் புதிய விடுதி வளாகக் கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டு நவம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத் துவமனைக்கு 2027ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டு அளவில் சி.ரி., எம்.ஆர்.ஐ. ஸ்கேனர்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். மன்னாருக்கும் விரைவில் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச-246)




# மூன்று சட்டமூலங்களுக்கு சபாநாயகர் சான்றளிப்பு

கொழும்பு, ஓக.5
இலங்கையின் நிதித்துறை நம்பகத்தன்மையை வலுப்படுத்தவும், பணமோசடி மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளிப் பதைக் கட்டுப்படுத்தவும் நாடாளுமன்றினால் நிறைவேற்றப்பட்ட 3 முக்கியமான நிதிச் சீர்திருத்தச் சட்டமூலங்களில் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன நேற்றுக் கையொப்பமிட்டுச் சான்றளித்துள்ளார்.

பணமோசடியைத் தடுக்கும் (திருத்தச்) சட்டம், நிதிப் பரிவர்த்தனைகள் பற்றிய அறிக்கையிடல் (திருத்தச்) சட்டம், பயங் கரவாதத்துக்கு நிதியளிப்பதனைத் தடுப் பதற்கான மாநாட்டின் (திருத்தச்) சட்டம் ஆகியவற்றுக்கே சான்றளிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டச் சீர்திருத்தங்கள் இலங்கையின் நிதியமைப்பின் நேர்மையைப் பாதுகாப்பதுடன், தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தி, சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன என்று நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

# நீதிபதிகளின் சேவை நீடிப்பு சிறை நெரிசலுக்கு தீர்வாகாது!

## ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஓக.5
சிறைச்சாலைகளில் காணப்படும் பாரிய நெரிசல் மற்றும் நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண நீதிமன்றங்களில் பிணை வழங்குவது தொடர்பான கடுமையான கொள்கையைக் கைவிடவேண்டும். அத்துடன் அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக் களத்தின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டப்படி குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்குப் பிணை வழங்குவதே வழக்கமான விதியாகும். பிணை மறுக்கப்படுவதே விதிவி லக்காகும். ஆனால், தற்போது பிணை வழங்காமையே இயல்பான நடைமுறையாக மாறியுள்ளதால் சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன.

சிறைகளிலுள்ள சுமார் 18,500 போதைப்பொருள் கைதிகளுக்கு அறிக்கைகள் தாமதமாவதால் பிணை கிடைப்பதில்லை. அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தில் காணப்படும் பெருமளவிலான பணியாளர் வெற்றிடங்களே இந்தத் தாமதத்துக்கு முக்கியமான காரணம்.

உயர் நீதிமன்றத்தில் 4, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 4 மற்றும் கீழ் நீதிமன்றங்களில் பல வெற்றிடங்கள் நிலவுகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்பாமல் சில நீதிபதிகளின் சேவைக்காலத்தை மட்டும் நீடிப்பது வழக்குத் தாமதத்துக்கோ சிறைச்சாலை நெரிசலுக்கோ தீர்வாகாது. ஒரு சிறையில் தொடங்கும் மோதல் மற்றொன்றுக்குப் பரவுவதைத் தடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மத்திய கிழக்கு மோதல் பாதிப்புக்கு 71.7 பில்லியன் ரூபா நிவாரணம்!

## நிதியியல் பற்றிய குழு ஒப்புதல்

கொழும்பு, ஓக.5

**மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவிவரும் மோதல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தாக்கங்கள் மற்றும் எரிபொருள் விலை உயர்வில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக, 2026ஆம் ஆண்டின் மேலதிக மதிப்பீட்டின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 71.7 பில்லியன் நிவாரணத் தொகுப்புக்கு நாடாளுமன்ற நிதியியல் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.**

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் அண்மையில் நடைபெற்ற நிதியியல் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தப் பிரேரணைக்கு அனுமதி அளிக்கப்பட்டதாக நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மொத்த நிவாரணத் தொகையான ரூ. 71.7 பில்லியனில் மிக அதிகளவாக ரூ. 52.8 பில்லியன் எரிபொருள் துறைக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. சர்வதேசச் சந்தையில் எரிபொருளின் இறக்குமதிச் செலவு அதிகரித்த போதிலும், நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்கவும், நுகர்வோருக்குச் சுமை ஏற்படாமல் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்யவும் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

71.7 பில்லியன் ரூபா நிவாரணப் பொதியின் கீழ் இலங்கை மின்சார சபைக்கு ரூ. 15 பில்லியனும் அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்கு ரூ. 8.2 பில்லியனும் யால சிறுபோக விவசாய நடவடிக்கைக்குரூ. 3 பில்லியனும் சிறுதோட்டப் பயிர் விவசாயிகளுக்கு ரூ. 2.2 பில்லியனும் மீன்பிடித்துறைக்கு ரூ. 1.2 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய எரிபொருள் மானியமானது எரிபொருள் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சலுகை அல்ல; மாறாக உலகளாவிய நெருக்கடி காலத்தில் நுகர்வோர் மீது சுமை விழாமல் தடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட தற்காலிக நுகர்வோர் நிவாரண நடவடிக்கை மட்டுமே என கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)



# சர்வதேச சுற்றுலாத்தலமாக சாட்டிக் கடற்கரை மாறும்

யாழ்ப்பாணம், ஓக.5

சாட்டி வெள்ளைக் கடற்கரையை சர்வதேசத் தரத்திலான சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் ருவான் ரணசிங்க தலைமையிலான குழுவினர், சாட்டி வெள்ளைக் கடற்கரைக்கு நேற்றுமுன் தினம் களப்பயணம் மேற்கொண்டனர். இதன்போது தற்போதைய நிலைமைகளை நேரில் பார்வையிட்டு, எதிர்கால அபிவிருத்திக்கான தேவைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

சாட்டி வெள்ளைக் கடற்கரை பளிச்சென்ற வெண்மணல் பரப்பு, நீலக்கடலின் அமைதி, தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் கண்கவர் சூரிய அஸ்த மனக் காட்சிகள் ஆகியவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. இயற்கை அழகையும், சுற்றுச்சூழல் வளத்தையும் ஒருங்கே தன்னகத்தே கொண்டுள்ள இந்தக் கடற்கரை, வடக்கு மாகாணத்தின் முக்கியமான சுற்றுலா வளங்களில் ஒன்றாகும். எனவே தேவையான அடிப்படைவசதிகள், சுற்றுலாப் பயணிகளுக்கான உட்கட்டமைப்புகள் மற்றும் நிலையான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம், சர்வதேசத் தரத்திலான சுற்றுலாத் தலமாக இந்தக் கடற்கரையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று குழுவினர் தெரிவித்தனர். (க-25)

# பருத்தித்துறை நகரசபையின் தென்னந்தோப்பு தீக்கிரை!

## விஷமிகள் வெறிச்செயல்



பருத்தித்துறை நகரசபைக்கு சொந்தமான வலிக்கண்டி காணியில் நின்ற ஏராளமான தென்னைகள் விஷமிகளால்தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. வலிக்கண்டி பகுதியில் பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான காணி உள்ளது. திண்மக்கழிவு அகற்றலுக்காக அந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்ட நிலையில், இந்தத் திட்டத்துக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதனால் நீண்டகாலமாக அங்கு திண்மக் கழிவுகள் எவையும் கொட்டப்படாதுள்ளது. அந்தக் காணியில் நின்ற தென்னைகளே தற்போது தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. (ம-100)

### பெருமளவு...

இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பிலேயே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது. சந்தேகநபர்களிடம் இருந்து 9கிலோ 400 கிராம் எடையுள்ள கஞ்சாப் பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார்தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-56)

# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.5

36ஆவது தேசிய இளைஞர் விளையாட்டுப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற யாழ்.மாவட்ட உதைப்பந்தாட்டப் பெண்கள் அணியினரைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 4.15 மணியளவில் கீரிமலை கருகம்பனைக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறும். (த-66)


## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 04 . 1945

மறைவு
04 . 08 . 2026



### தர்மராஜேஸ்வரன் நாகராஜேஸ்வரி

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில்லை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மராஜேஸ்வரன் நாகராஜேஸ்வரி நேற்று (04.08.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (ஓய்வுபெற்ற அதிபர்) நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்) கண்மலர் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மராஜேஸ்வரனின் (ஓய்வுநிலை மக்கள் வங்கி உதவி முகாமையாளர்) அன்பு மனைவியும், தார்மீகனின் (மென்பொறியியலாளர்) பாசமிகு தாயாரும், நிசாந்தினியின் பாசமிகு மாமியாரும், சுபநிதா, பிரநிதா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி மற்றும் இராஜராஜேஸ்வரன் (ஓய்வு நிலை மிருக வைத்தியர்), நாகராஜேஸ்வரன் (ஓய்வுநிலை பொறியியலாளர்), தியாகராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரன் (ஓய்வுநிலை முகாமையாளர்) காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி ஓய்வுநிலை ஆயுள்வேத வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற சட்டத்தரணி), கனகராஜேஸ்வரன் (ஓய்வுபெற்ற மருந்தாளர்), ஜெகதீஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஜதீந்திரேஸ்வரன், விமலேஸ்வரி மற்றும் மகேஸ்வரன் (மாரி அம்மன் மோட்டோர்ஸ்), குலராஜேஸ்வரி, தயாளந்டேஸ்வரன், ஜெயமங்களேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2026) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

**தகவல்: தார்மீகன் (மகன்)**

**0770716857, 021 222 0014**

(CS 322776)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பீட்டு...

யாழ்ப்பாணம் - பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக சில காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன. அவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலாளர் திருமதி சிவகெங்கா சுதீஸ்னர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டச் செயலர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பலாலி மேற்கு, மயிலிட்டி வடக்கு, தென்மயிலை மற்றும் குரும்பசிட்டி ஆகிய நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில், 1986ஆம் ஆண்டு பலாலி விமான நிலைய விரிவாக்கத்துக்காக வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுவீகரிக்கப்பட்ட 267 ஏக்கர் காணிகளின் 436 உரிமையாளர்கள் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். 1986ஆம் ஆண்டு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு 2022ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து, இழப்பீடு வழங்குவதற்கான சத்தியக் கடதாசியில் கையொப்பமிடுமாறு காணி உரிமையாளர்களிடம் கோரப்பட்டது.

எனினும், காணிகளுக்கு என பிரத்தியேக மதிப்பீடுகள் வழங்கப்படவில்லை. காணிகளை ஒரே அலகாகக் கொண்டு, தனிப்பட்ட அமைவிடத்தைக் கருத்திற் கொள்ளாமல் இழப்பீடு பெறுவதற்குச் சம்மதம் பெறும் வகையில் அமைந்த அந்தச் சத்தியக் கடதாசிக்கு காணிகளின் உரிமையாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். சத்தியக் கடதாசி தெளிவற்றதாக இருப்பதால் அதில் தாம் கையொப்பம் இடமாட்டோம் என்று அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். குழப்பங்கள் தொடர்ந்த நிலையில் நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் அழைக்கப்பட்டனர். இதற்கிடையே சிலர் தமது காணிகளைச் சுவீகரிக்க அனுமதி வழங்க முடியாது எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டு வெளிநடப்புச் செய்தனர்.

நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர், காணி உரிமையாளர்கள் தரப்பில் ஏழு பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு, அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக சத்தியக்கடதாசியில் திருத்தங்கள் மேற்கொள்வது என இணக்கம் காணப்பட்டது. இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதும் காணிகளின் உரிமையாளர்களை மீள அழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம-26)

## வீடமைப்புத்...

கத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில் நாடளாவிய ரீதியில் பல வீட்டுத்திட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. இதற்காக பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான நிதி கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டபோதிலும் வீட்டுத் திட்டத்தை முழுமைப்படுத்தும் வகையில் நிதி வழங்கப்படவில்லை. இதையடுத்தே குறித்த வீட்டுத் திட்டத்துக்கான எஞ்சிய நிதியை விடுவிக்குமாறு வலியுறுத்தி கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு முன்பாக மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றையும் கண்டாவளை பிரதேச செயலாளரிடம் அவர்கள் ஒப்படைத்துள்ளனர். (அ-ம-113)

## 4 என்புத்...

பான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 42ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே 4 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டதுடன், 2 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மழை அங்கியுடன் என்புத்தொகுதியொன்று அடையாளம் காணப்பட்ட நிலையில் அது நேற்று முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. அந்த என்புத் தொகுதியுடன் மீட்கப்பட்ட பொத்தான்கள், காலுறைகள் என்பன சான்றுப் பொருள்களாக நீதிமன்ற கட்டுக் காவலில் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## இந்தியத்...

பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநித்துவம் செய்யும் ஆறு தமிழ்க் கட்சிகள் இணைந்து செயற்பட்டு வருகின்றன. அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளே இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

அரசியற் கைதிகளின் விடுதலை, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, அதிகாரப் பகிர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, ஆறு தமிழ்க் கட்சிகளும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அநுரவைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## இறந்த...

ஏராளமான மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்குவதால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கரையொதுங்கியுள்ள மீன்களை பொதுமக்களோ அல்லது வியாபாரிகளோ சேகரித்து உணவுக்காக பயன்படுத்தவோ, விற்பனை செய்யவோ வேண்டாமென துறைசார் அதிகாரிகளால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மீன்கள் இறந்து மிதப்பதற்கான காரணம் இன்னமும் சரிவரத் தெரியவராத நிலையில், அது தொடர்பான மேலதிக ஆய்வு இடம்பெற்று வருகின்றது. (அ-ம-26)

## சீரற்ற...

மத்திய மலைநாட்டில் தற்போதும் தொடர்ந்து கனமழை கொட்டித்தீர்த்து வருகின்றது. இதனால் வெள்ளப் பேரிடர்களும் மண்சரிவும் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்றன. இதன்படி, நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி உட்பட 8 மாவட்டங்களில் 3 ஆயிரத்து 14 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 832 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்த அனர்த்தம் காரணமாக ஒரு வீடு முழுமையாகவும், 290 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களில் 952 குடும்பங்க ளைச் சேர்ந்த 3 ஆயிரத்து 538 பேர் 51 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (அ-ம)

## மோ.சைக்கிள்...

உயிரிழந்தார். காரைநகர் - கருங்காலி பகுதியைச் சேர்ந்த குமாரன் மகேந்திரலிங்கம் (வயது-66) என்ற முதியவரே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் முதியவர் மீது மோதியதாலேயே இந்த இறப்புச் சம்பவித்தது என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மோட்டார்சைக்கிளில் சென்ற இளைஞர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-27)

## சிலைகள்...

பட்ட தடையை இன்றுவரை நீடித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியற் கைதிகளான குட்டிமணி மற்றும் தங்கத்துரைக்கு சிலைகள் அமைப்பதற்கு ஏற்பாட்டுக் குழுவினர் நடவடிக்கை எடுத்து வந்தனர். இந்தச் சிலைகளை கடந்த 25ஆம் திகதியளவில் திறப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றன. இந்தப் பணிகளை ஒருங்கிணைத்து வந்த வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் உபதவிசாளர் சதீஸ் கடந்த 22ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையான நிலையில், அவரைப் பிணையில் விடுவித்த மன்று சிலைகளை அமைப்பதற்கு தடை விதித்து உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. இதன்போது புலனாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அரச சட்டத்தரணி அவகாசம் கோரிய நிலையில் வழக்கு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிலை திறக்கும் நடவடிக்கைக்கும் இன்று வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. கந்தசாமி சதீஸ் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, விஸ்வலிங்கம் மணிவண்ணன் உட்பட்ட ஐந்து சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர். (அ-ம-80)

## மகாநாயக்க...

திசைகாட்டி அரசாங்கத்துக்கு எதிர்ப்பைத் திரட்டும் வகையில் கூட்டு எதிரணியினர் மகாநாயக்க தேரர்களைச் சந்திக்கத் தீர்மானித்துள்ளனர்.

நீதிபதிகளின் ஓய்வு வயது நீடிப்பு மற்றும் சிறைக்கலவரங்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கு பல்வேறு இடங்களில் எதிர்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த எதிர்ப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே மகாநாயக்க தேரர்களைச்சந்திப்பதற்கு எதிரணியினர் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன்படி எதிர்வரும் சனிக்கிழமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட கூட்டு எதிரணியின் பல முக்கியமான அரசியல் தலைவர்கள் இந்தக் குழுவில் இடம்பெறுவார்கள் என்று தெரியவருகின்றது. (அ-ச-44)

## வீட்டுக்காவல்...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்தாவது:-

தடுப்புக் காவலில் வைத்தல் அல்லது சிறைப்படுத்தல் போன்றவற்றுக்கு மாற்று வழிமுறையாக பொருத்தமான வழக்கு நடவடிக்கைகளில் சந்தேகநபர்களை வீட்டுக்காவலில் வைப்பதற்கான ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவர ஏற்கனவே பரிசீலனைகள் இடம்பெற்றன. எனினும் பின்னர் அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டன. அந்தத் திட்டத்தை மீள நடைமுறைப்படுத்த தற்போதைய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதன் பிரகாரம் சட்டவரைஞர் குழு அடுத்தகட்ட நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ளும் - என்றார். (அ-ம)

## மின்...

ஆணைக்குழு அறிவித்துள்ளது. பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கட்டண அறவிடல் முறைமைக்கு அமைய, 2026ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மின்சார விநியோகத்துக்கான செலவு அதிகரிப்பு 0.3 வீதமாக மட்டுமே காணப்படுகின்றது. ஆதலால் மின் கட்டணத்தில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எனவே தற்போது உள்ள மின்கட்டண அறவீட்டு முறைமையே தொடர்ந்து அமுலில் இருக்கும் - என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் வரலாறுகளை ஆவணப்படுத்தல் அவசியம்!

## ரவிகரன் வலியுறுத்து

**முல்லைத்தீவு, ஓக.5**

**தமிழர்களின் வீரம் செறிந்த வரலாறுகளை ஆவணப்படுத்தி, அவற்றை அடுத்த சந்ததிக்குத் தெரியப்படுத்துவது எமது வரலாற்றுக் கடமை என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்ற தமிழர் பாரம்பரிய வீரக்கலை வீரர்களின் மதிப்பளிப்பு நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மாவீரன் பண்டாரவன்னியன் அந்நியப்படைகளை வென்று வாகை சூடிய வரலாறு முல்லைத்தீவுக்கு உள்ளது. பண்டாரவன்னியன் வெற்றிகொண்ட ஒல்லாந்தக் கோட்டையின் சிதைவுகள் தற்போதும் முல்லைத்தீவு மாவட்டச் செயலக வளாகத்தில் காணப்படுகின்றன. இவ்வாறு தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றுகின்ற வகையிலான வன்னி மன்னன் பண்டாரவன்னியன், பால்ராஜ் போன்றவர்களை நினைவுகூருவது தமிழர்களின் வரலாற்றுக் கடமையாகும். இவற்றை அடுத்த சந்ததிக்குத் தெரியப்படுத்த ஆவணப்படுத்தல் அவசியம். தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம் தமிழ் மக்களின் அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் முனைப்புடன் செயற்பட்டு வருவதால், நாம் அஞ்சத்தேவையில்லை-என்றார். (க-246)



# சிறைச்சாலை நெருக்கடிக்கு முதலில் தீர்வு காணுங்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி செயற்குழு உறுப்பினர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.5

"அரசாங்கம் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிப்பதற்கான சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்பாக, நாட்டின் சிறைச்சாலைகளில் காணப்படும் கடுமையான நெருக்கடியைக் குறைப்பதற்குத் தேவையான சட்டத் திருத்தங்களை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப் பினர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும். முன்னாள் பொலிஸ்மாஅதிபர் பூஜித ஜெயசுந்தர மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகிய இருவருடன் மட்டும் இந்த நடவடிக்கையை முடித்துவிட முடியாது. நீதிமன்றத் தீர்ப்புகள் நீதிமன்றக் கட்டமைப்பால் வழங்கப்படுகிறதா அல்லது ஜனாதிபதி மற்றும் அரசியல்வாதிகள் தங்களுக்குத் தேவையான முறையில் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்களா என்ற பலத்த சந்தேகம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது. நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சிறைச்சாலை மோதல்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசாங்கம் திணறிவருகிறது. மஹர சிறைச் சாலையில் இடம்பெற்ற சம்பவத்தின் மூலம் நீதி அமைச்சு தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறியுள்ளது என்பது மீண்டும் உறுதியாகியுள்ளது. வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்துவதற்காக நீதிபதிகளின் வயதெல்லையை நீடிப்பதாகக் கூறும் அரசு, அதைவிட மிக முக்கியமாகச் சிறைச்சாலை களில் காணப்படும் நெருக்கடிகளைக் குறைப்பதற் கான சட்டச் சீர்திருத்தங்களையே உடனடியாக மேற்கொள்ள வேண்டும்- என்றார். (ச-இ)



# தமிழ் மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு முழு ஆதரவு வழங்குவதற்கு தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.5

மாகாணசபைத்தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட்டு, அவற்றுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்குதல் உள்ளடங்கலாக தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதை முன்னிறுத்தி முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தமிழ்பேசும் மக்களின் நலனை முன்னிறுத்தி ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டுள்ள 6 தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. சந்திப்பில் புதிய அரசியலமைப்பு உருவாக்கம், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துதல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுத்தல் மற்றும் மலையக மக்களுக்கான காணி உரிமையை வழங்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தாம் கொண்டிருக்கும் நிலைப்பாடுகள் குறித்தும், இவை பற்றி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தாம் எடுத்துரைத்த விடயங்கள் குறித்தும் மேற்படி கட்சிகளின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித்தலைவரிடம் எடுத்துரைத்தனர். அவற்றைச் செவிமடுத்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, மாகாணசபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படுவதையும், மாகாணசபைகளுக்கான முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படுவதையும் தான் ஆதரிப்பதாகவும், அதற்குரிய ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தமிழ்பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார். (ச-இ)

# தோல்வியை ஒப்புக்கொண்டு அரசு வெளியேற வேண்டும்!

## சுதந்திரக்கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.5

அரசாங்கம் தனது தோல்வியை மறைக்க முயலாமல், தகுதியானவர்களிடம் ஆட்சியைக் கையளித்துவிட்டு வெளியேற வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை மகளிர் முன்னணியின் தலைவி குமாரி பதிரகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் ஒழிப்பு என்ற பெயரில் இளைஞர்கள் பெருமளவில் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுவதாலேயே மஹர சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ளது போன்ற மோதல்களும் உயிரிழப்புகளும் நிகழ்கின்றன. எதிர்க்கட்சியில் இருந்தபோது கைதிகளின் உரிமைகள் குறித்துப் பேசிய தற்போதைய ஆட்சியாளர்கள் இன்று இத்தகைய மனித உரிமை மீறல்கள் குறித்து மௌனம் காப்பது கண்டிக்கத்தக்கது. நீதிபதிகளின் வயதெல்லை நீடிப்பது குறித்து ஆர்வம் காட்டும் அரசாங்கம், வாகன இறக்குமதி மோசடி, நிலக்கரி மோசடி உள்ளிட்டவை தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்காது காலம் தாழ்த்துவது ஏன்? நாட்டை நிர்வகிக்கத் தெரியாத இந்த அரசாங்கம், தோல்வியை ஒப்புக்கொண்டு தகுதியானவர்களிடம் ஆட்சியைக் கையளித்துவிட்டு விலகிச் செல்லவேண்டும் - என்றார். (ச-இ)

# நீர்வேலி தெற்கு விவசாய சம்மேளன பொதுக்கூட்டம் எதிர்வரும் புதனன்று!

யாழ்ப்பாணம், ஓக. 5

நீர்வேலி தெற்கு விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி தெற்கு மாதர் சங்கத்தின் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த பொதுக்கூட்டமே எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமூகமளிக்குமாறும், சமூகமளிக்காத அங்கத்தவர்களுக்கான உதவித் திட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-25)

பணியாளர்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் பிரபல
நகை வியாபார நிலையத்திற்கு
18 - 40 வயதிற்குட்பட்ட ஆண், பெண்
பணியாளர்கள் தேவை.
நேரில் வருகை தரவும்.
தொடர்பு: 077 618 3302, 021 222 2863

உதவியாளர் தேவை
கொழும்பில் வசிக்கும் சிறிய குடும்பம்
ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று
குழந்தை பராமரிப்பு மற்றும் வீட்டு
வேலைகளிற்கு 45 - 55 வயதுடைய
பெண் உதவியாளர் தேவை.
தொடர்பு: 070 704 9854

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org